# நாவலர் கல்வி மரபும் இன்றைய தேவையும்

## (மின் நூல்)




**பேராசிரியர்**

**கலாநிதி இ. குமாரவடிவேல்**

முதுநிலைப் பேராசிரியர், விஞ்ஞான பீடம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை



**சைவ சித்தாந்த மன்றம், கனடா**

உ
சிவமயம்

# நாவலர் கல்வி மரபும் இன்றைய தேவையும்

## (மின் நூல்)

**பேராசிரியர்**

**கலாநிதி இ. குமாரவடிவேல்**

முதுநிலைப் பேராசிரியர், விஞ்ஞான பீடம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**வெளியீடு:**

**சைவ சித்தாந்த மன்றம், கனடா**

Saiva Sidhdhantha Manram, Canada
1008-50 Elm Drive East , Mississauga
Ontario, L5A 3X2 Canada
Tel: (905) 566-4822

முதற் பதிப்பு: 14-12-2003

மீள் பதிப்பு: 26-11-2021

# பதிப்புரை

தவத்திரு ஆறுமுகநாவலர் அவர்கள் சைவநெறி தழைத்தோங்கவும் தமிழ்மொழி செழித்து வளரவும் அரும் பெரும் பணிகள் ஆற்றியவர்; சைவசமய வளர்ச்சிக்கு மூலகர்த்தாவாக விளங்கியவர். இவர் தமிழையும் சைவத்தையும் இரு கண்கள் எனக் கொண்டு வாழ்ந்தவர்.

சைவசமயத்தை அழியவிடாது பாதுகாக்க நாவலர் எடுத்த முயற்சிகள் பல. புறச்சமயம் புகாது, மக்களை சைவசமயத்தில் நிலைத்து நிற்கச் செய்ய அரும்பாடு பட்டார். சைவசமயமே மெய்ச்சமயம் என நிலை நிறுத்தியவர் நாவலர் பெருமான். அவர் இலங்கையிலும், தமிழ் நாட்டிலும் ஆற்றிய அரும்பெரும் பணிகளின் பயன்பாடுகளை நாம் பேணி வளர்க்க வேண்டும்.

அந்த வகையில், நாவலர் கல்விப்பணிக்கு ஆற்றிய பெருந்தொண்டைக் குறித்து “நாவலர் கல்வி மரபும் இன்றைய தேவையும்” என்னும் கட்டுரையை, நாவலர் முதன் முதலாவதாக நிறுவிய வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையின் நூற்றிஐம்பதாவது ஆண்டு விழா மலருக்குப் பேராசிரியர் இ. குமாரவடிவேல் அவர்கள் எழுதியிருந்தார். அதனை “அன்புநெறி” இதழில் பிரசுரிப்பதற்கு அனுப்பி உதவினார். அதனைத் தொடர் கட்டுரையாக மாதந்தோறும் வெளியிட்டோம். இந்த ஆராய்ச்சிக் கட்டுரையை படித்த சைவ அன்பர்கள், இக்கட்டுரை உலகெங்கும் பரந்து வாழும் சைவத் தமிழ் மக்களுக்கு மிகவும் பயனுள்ளது. தாம் தாம் வாழும் நாடுகளிலும் கட்டுரைச் செய்திகளை நடைமுறைப்படுத்தி சைவத்தையும் தமிழையும் அவற்றின் தூய்மையைப் பேணி வளர்க்க உதவும் எனக் கூறி அக்கட்டுரையை நூல்வடிவில் வழங்க வேண்டும் என வேண்டினர். இத்தகவலைப் பேராசிரியருக்குத் தெரிவித்தபோது, அவரும் மனம் உவந்து, கனடா சைவசித்தாந்த மன்றம் நாவலர் பெருமானின் 124 ஆவது குருபூசையில் வெளியிட தமது ஒப்புதல் அனுமதியை வழங்கியுள்ளார். பேராசிரியர் இ. குமாரவடிவேல் அவர்களுக்கு கனடா சைவசித்தாந்த மன்றத்தின் சார்பில் நன்றியை அன்புடன் கூறுகின்றேன்.

கலாநிதி நா. சுப்பிரமணியன் அவர்கள் யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழ் பேராசிரியர். அவர்களை இந்நூலுக்கு அணிந்துரை வழங்குமாறு வேண்டிய பொழுது, மனம் உவந்து உரியகாலத்தில் எழுதி வழங்கினார். பேராசிரியர் குமாரவடிவேல் அவர்களை நன்கு அறிந்தவர். அவர் தமது அணிந்துரையில் "சமூகப் பொறுப்புள்ள ஒரு கல்வியாளர் என்ற வகையிலும் நாவலர் மரபை முன்னெடுக்கும் "இந்து சாதனம்" இதழின் ஆசிரியர் என்ற வகையிலும் பேராசிரியர் முன் வைத்துள்ள மேற்படி வரலாற்றுப் பார்வையும், சைவ உலகுக்கான அறை கூவலும், சமகால சைவ உலகால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கியத்துவம் உடையவை" என்று கூறுகிறார். பேராசிரியர் நா. சுப்பிரமணியன் அவர்களுக்கு கனடா சைவசித்தாந்த மன்றத்தின் சார்பில் நன்றியைக் கூறுகிறேன்.

தவத்திரு ஆறுமுகநாவலர் அவர்களின் தொண்டுகளைப் போற்றி அருந்தொண்டாற்றி வரும் கவிஞர் கலாநிதி வி. கந்தவனம் அவர்கள் சிறப்புரை வழங்கியுள்ளார். அவர்களுக்கு கனடா சைவசித்தாந்த மன்றத்தின் சார்பில் நன்றியைக் கூறுகிறேன். அவர் "இந்நூல் சிந்தனைக்கு விருந்தாகவும் செயலில் இறங்கத் தூண்டும் மருந்தாகவும் அமைந்துள்ள ஓர் அரிய படைப்பு" என்கிறார்.

நூலின் அட்டையை மிகவும் அழகுற வண்ணமைப்புச் செய்தும், எழுத்து வடிவமைப்புச் செய்தும் உதவிய **அன்புநெறி** ஆசிரியர் திருமதி. வடிவழகாம்பாள் விசுவலிங்கம் அவர்களுக்கு கனடா சைவசித்தாந்த மன்றத்தின் சார்பில் நன்றியைக் கூறுகிறேன்.

இந்நூலை சைவத் தமிழ் அன்பர்கள் பெற்றுப் படித்து, சைவத் தமிழ் மறுமலர்ச்சிக்கு ஆக்கம் தேட சிவபெருமான் திருவருள் துணை நிற்க வேண்டி வணங்குகிறோம்.

திரு. தி. விசுவலிங்கம்
தலைவர்
சைவசித்தாந்த மன்றம், கனடா
14-12-2003

# அணிந்துரை

ஈழத்துத் தமிழ் மக்களின் பண்பாட்டுத் தேசியத்துக்குப் பங்களிப்புச் செய்துள்ள பெருமக்களுள் முதன்மையான ஒருவராகக் கணிக்கப்படுபவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். *19*ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் (1822-1879) வாழ்ந்த அவர் அன்றைய அந்நியர் ஆட்சிச் சூழலில் அந்நிய சமயப் பிரசார முயற்சிகளுக்கு மத்தியில் ஈழத்தமிழரின் பாரம்பரிய சமயமான சைவத்தை பாதுகாத்து நிலைநிறுத்தும் பணியை மேற்கொண்டவர். அதில் வெற்றியும் கண்டவர். அதனால் "சைவக் காவலர்" மதிப்பையும் பெற்றவர். சமயம் என்ற தளத்தில் ஆழமாகக் காலூன்றி நின்று செயற்பட்ட அவர் சமகால சமூகப் பிரச்சினைகள் அரசியல் மற்றும் பொருளியல் சார்ந்த தேவைகள் என்பவற்றிலும் கவனம் செலுத்தி மக்களை வழிநடத்தியவர். அவ்வகையில் பொறுப்புள்ள ஒரு குடிமகனாகவும் திகழ்ந்தவர். அவரது இவ்வகைச் செயற்பாடுகள் அவருக்குத் "தேசீய வீரர்" என்ற கணிப்பையும் தந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

நாவலர் அவர்களின் மேற்குறித்த அனைத்துவகைச் செயற்பாடுகளிலும் அவர் மேற்கொண்ட முக்கிய அணுகுமுறை, சமூகத்துக்கு அறிவூட்டும் செயற்பாங்கு ஆகும். இளையோர் முதல் முதியோர் வரை அனைத்துத் தரப்பினரும் அறிவாற்றல் பெற்றுத் தகுதி வாய்ந்த சமூக மாந்தராக வேண்டும் என்ற குறிக்கோளுடன் அவர் செயற்பட்டுள்ளார் என்பதை அவரது வாழ்வும் எழுத்தும் பிற ஆக்கப் பணிகளும் எமக்கு உணர்த்தி நிற்கின்றன. சுருங்கக் கூறுவதாயின் நாவலரை அன்றைய சமுதாயத்துக்கு "நல்லறிவுச் சுடர்" கொளுத்திய ஒரு கல்வியாளன் – நல்லாசிரியன் என நாம் கணிக்கலாம். இளையோர்க்குரிய முறைசார் கல்வி மற்றும் வளர்ந்தோர்க்குரிய முறைசாராக் கல்வி ஆகிய இரு தளங்களிலும் கருத்தூன்றித் திட்டமிட்டுச் செயற்பட்டவர் இவர் என்பதை அவரது ஒட்டு மொத்தச் செயற்பாடுகளும் நமக்குத் தெளிவுற உணர்த்துவன. இவ்வாறு நாவலரவர்கள் ஒரு கல்வியாளன் என்ற நிலையிற் செயற்பட்ட முறைமை, அவர் தொடக்கி வைத்த கல்வி முறைமையின் மரபுத் தொடர்ச்சி மற்றும் தளர்ச்சி, இன்றைய சூழலில் அம்மரபு பேணப்பட வேண்டியுள்ளதன் அவசியம் என்பனபற்றிய ஒரு வரலாற்றுக் காட்சியை முன்வைத்து எம்மைச் சிந்திக்கத் தூண்டும் முயற்சியாக, பேராசிரியர் கலாநிதி

இ. குமாரவடிவேல் அவர்களது, "நாவலர் கல்வி மரபும் இன்றைய தேவையும்" என்ற இந்நூலாக்கம் அமைகின்றது.

இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற் பௌதிகவியல் துறைப் பேராசிரியராகத் திகழும் கலாநிதி இ. குமாவடிவேல் அவர்கள் "நாவலர் ஞான மர"பினரால் தோற்றுவிக்கப்பட்டு வெளிவரும் "இந்து சாதனம்" இதழின் ஆசிரியப் பணியையும் ஏற்றுள்ளவர். இவ்வாறு ஒரு கல்வியாளர் என்ற வகையிலும் இதழாசிரியர் என்ற வகையிலும் தமது சமகாலச் சூழல் தொடர்பாக– சைவசமயம் சார் சூழல் தொடர்பாக – அவர் கொண்டிருந்த கவனத்தின் பெறுபேறாக உருவானது இந்நூல். சமகாலச் சைவச் சூழலில் காணப்படும் குறைபாடுகளாக அவர் கருதியவற்றைக் களைவதற்கு ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்களின் சிந்தனை, செயல் திட்டங்கள் என்பவற்றை முன்மாதிரிகளாகக் கொள்ளலாம் என்பது அவரது கருத்து நிலையாகும். இந்தக் கருத்து நிலையின் எழுத்து வடிவ வெளிப்பாடாகவே இந்நூலாக்கம் உருப்பெற்றுள்ளது. நாவலரவர்களின் கல்விசார் சிந்தனை செயன்முறை என்பவற்றின் சிறப்பம்சங்கள் எவையெவை என்பதைச் சுட்டி அவற்றின் இன்றைய – சமகாலம்–பயன்பாட்டுத் தேவைகளை உணர்த்தி, அவற்றை எவ்வாறு வளர்த்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம் என விளக்கும் முறைமையில் இந்நூல் அமைந்துள்ளது.

நாவலர் அவர்கள் தமது காலப்பகுதி வரை மரபாகப் பேணப்பட்டு வந்த கல்வி முறைமைகளைப் புதுவரவாக அமைந்த மேலைப் புலக் கல்வி மரபுடன் இணைத்துத் திட்டப் பாங்குடன் செயற்படுத்தியவர். இவ்வாறான இணைப்பு முறைமையிலான கல்விச் செயற்பாடே "நாவலர் கல்வி மரபு" என்ற தலைப்பின் மூலம் இந்நூலில் எடுத்துப் பேசப்பட்டுள்ளது. இவ்வாறு இணைத்து அவர் செயற்படுவதற்குக் காரணிகளாக அமைந்திருந்த அன்றை காலச் சூழலின் குறைபாடுகள் எவையெவை என்பதைச் சுட்டி, அவற்றுக்கு மாற்றாக அவர் (நாவலர்) எவ்வாறான புதுவகை அணுகுமுறைகளை மேற்கொண்டார் என விளக்கும் முறைமையில் இந்நூலின் உள்ளடக்கம் வளர்த்துச் செல்லப்படுகின்றது.

நாவலர் மேற்படி கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கிய காலப்பகுதியில் ஈழத்துத் தமிழர் சமூகம் – குறிப்பாக நாவலர் செயற்பட்டு நின்ற யாழ்ப்பாணத் தமிழர் சமூகம் மரபு வழியிலான சமய நம்பிக்கைகளையும் சடங்காசாரங்களையும் பொருளுணர்ந்து

பேணிக் கொள்ளும் நிலையில் இருக்கவில்லை. இவற்றைத் தெரிந்து தெளிந்திருக்க வேண்டிய சிவாச்சாரியர்கள், அர்ச்சகர்கள், சைவக் குருமார்கள் ஆகியோர் தமது தகுதிப்பாட்டை அவ்வகையில் வளர்த்துக் கொண்டவர்களாகத் திகழவில்லை. இவற்றை அறிவதற்குக் கருவிகளாகிய சமயம் மற்றும் ஒழுக்கவியல் சார் நூல்கள் சமுதாயத்தின் சிலரிடம் முடங்கிக் கிடந்தன. மரபு வழிச் சமய அறிவு பெறுவதற்கு அடிப்படையான முறையான பாடத்திட்டம் உருவாக்கம் பெற்றிருக்கவில்லை. பாடநூல்களும் உருவாக்கப் பட்டிருக்கவில்லை. இவ்வாறானதொரு சூழ்நிலையே புறச்சமயம் புகுவதற்கான முக்கிய காரணியாக அமைந்திருந்தது. இவ்வாறான சூழல்பற்றி நாவலரவர்கள் தமது **யாழ்ப்பாணச் சமயநிலை** முதலிய பிரசுரங்களில் விரிவாகப் பேசியுள்ளார்.

மேற்படி சான்றாதாரங்கரளைத் துணைக்கொண்டு நாவலர் காலச் சூழல் – குறிப்பாகச் சமயக் கல்விநிலை பற்றிய காட்சியைப் பேராசிரியர் நம் கண்முன் இட்டு வருகிறார்.

மேற்சுட்டிய வகைகளிலான குறைபாடுகளை நீக்கும் நோக்கில் நாவலர் அவர்கள் மேற்கொண்ட செயன்முறைகள் “தமிழ்க்கல்வி மரபில் நாவலர் புகுத்திய முக்கிய அம்சங்கள்” என்ற துணைத் தலைப்பிலே வரிசைப்படுத்தித் தரப்படுகின்றன. பாடசாலைகள் உருவாக்கம், பாடவிதானம், மற்றும் பாடநூலாக்கம், வினா–விடை வகையான நூலாக்கம், ஏடுகள் பதிப்பு, உரைநடையில் நூல்கள் எழுதியமை, பிரசங்கம், புராணபடனம், துண்டுப் பிரசுரம் முதலான செயல்முறைகள் ஊடாக நாவலரவர்கள் திட்டப்பாங்குடன் செயற்பட்டுள்ள முறைமையை பேராசிரியர் அவர்கள் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறார். நாவலர் மேற்கொண்ட மேற்படி செயன்முறைகள் அக்காலச் சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரையும் கருத்துட் கொண்டவையாகும். இதனைப் பேராசிரியர் தெளிவுறுத்தியுள்ளார். குறிப்பாக முறைசார் கல்வி, முறைசாராக் கல்வி ஆகிய இரு தளங்களிலும் நாவலரின் செயன்முறைகள் அமைந்தன என்பதைக் காட்டும் வகையில் இப் பகுதியின் விளக்கங்கள் அமைந்துள்ளன. நாவலரின் உரை மற்றும் உரைநடை நூலாக்க முயற்சிகள் பற்றிக் குறிப்பிடுமிடத்து நாவலரின் கூற்றாகப் பேராசிரியர் எடுத்துக் காட்டியுள்ள பின்வரும் கூற்று, நாவலரின் சமூக நோக்கையும் அணுகு முறையையும் தெளிவுறுத்தி நிற்பது.

"நிறைந்த கல்வி அறிவுடைய வித்துவான்களும் குறைந்த கல்வி அறிவுடைய பிறரும் ஆகிய யாவரும் எக்காலத்திலும் எளிதில் வாசித்து உணரும் பொருட்டும்.... கத்திய ரூபமாகச் செய்து வாசிப்போர்களுக்கு எளிதிலே பொருள் விளங்கும்படி பெரும்பான்மையும் சந்தி விகாரங்கள் இன்றி அச்சிற் பதிப்பித்தேன்"
(பக். 19)

நாவலரவர்களின் கல்விசார் செயற்பாடுகள் எத்தகைய உணர்வுத் தளத்தில் மேற்கொள்ளப்பட்டவை என்பதை இன்றைய தலைமுறையினர்க்கு அறிவுறுத்தி நிற்கும் முக்கிய மேற்கோட் சான்றாக இது திகழ்கின்றது.

இவ்வாறு நாவலராற் புகுத்தப்பட்ட முக்கிய அம்சங்களைக் கூறிச் செல்லும் பேராசிரியர் அவர்கள் நாவலர் புகுத்த முயன்ற – செயற்படுத்த விரும்பிய – இரண்டு நோக்கங்கள் அவரது சமகாலத்தில் நிறைவேறவில்லை என்பதையும் தமது கவனத்துக்கு இட்டு வருகிறார். அவை: சைவப் பத்திரிகை வெளியிடல்; சைவக் குருமார் சைவப் பிரசாரகர், சைவ ஆசிரியர் ஆகியவர்களைப் பயிற்றுவிக்கும் அமைப்பு நிறுவுதல். இந்த நோக்கங்கள் பற்றி எடுத்துப் பேசியும் எழுதியும் வந்த நாவலர் இவை நிறைவு பெறுமுன்னரே இவ்வுலக வாழ்விலிருந்து நிறைவு பெற்று விட்டார்.

மேலும், சைவ மேம்பாட்டில் அக்கறை உள்ளவர்களை இணைக்கும் வகையில் "சைவப்பிரகாச சமாஜம்" என்ற பெயரில் ஒரு அமைப்பை 1879 இல் (தமது வாழ்வின் இறுதி ஆண்டில்) அவர் நிறுவினார் என்பதையும் அவ்வமைப்பு நிலை கொள்ளும் முன்பே அவரது வாழ்வு நிறைவு பெற்று விட்டது என்பதும் பேராசிரியர் அவர்களால் நமது கவனத்துக்கு முன்வைக்கப் படுகின்றது.

மேற்கண்டவாறாக, நாவலரின் சிந்தனை, செயல் முறைகள் என்பவற்றை விரித்துப் பேசிய பேராசிரியர் அவர்கள் நாவலரின் கல்வி மரபானது சமயம் என்ற எல்லைக்குள் மட்டும் அமைந்ததன்று என்பதைத் தனித் தலைப்பில் சான்றுகளுடன் விளக்கியுள்ளார். நாவலரின் கல்விச் சிந்தனை, செயன்முறை என்பன சமயக் கல்விக்கு முதன்மை தந்து நின்றமை வெளிப்படை. இது அன்றைய காலத்தின் தேவை. அந்நிய மதப் பிரசாரச் சூழலில் அது தவிர்த்திருக்க முடியாதது. ஆனால் கல்விக்கூடாக எய்தப்படும் பயன்பாடுகள் என்ற வகையில் இந்த உலகியல் சார்ந்த தேவைகளை நாவலர்

புறக்கணித்தவர் அல்லர். மாறாக, சைவச்சிறார் தம் சமயத் தளத்தினின்று மாறாமல் ஆங்கிலம் முதலிய உலகியலுக்கான கல்விகளைப் பெற வேண்டும் என்பதே நாவலரின் நோக்கமாக அமைந்திருந்தது. "நாவலர் கல்வி மரபு" தொடர்பான இந்த அடிப்படை உண்மையைத் தெளிவுறுத்தும் பாங்கில் பேராசிரியர் பல சான்றுகளை இப்பகுதியில் முன் வைக்கிறார். குறிப்பாகத் தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி முதலான சமயச் சார்பற்ற அறிவுத் தேட்டங்களில் நாவலர் கொண்டிருந்த ஈடுபாட்டை இச்சான்றுகள் நமக்கு உணர்த்தி நிற்கின்றன. இவ்வாறான சான்று விளக்கங்களின் ஈற்றில் பேராசிரியர் தமது தொகுப்புரையில்,

> "ஆகவே, நாவலர் கல்வி பற்றிய நோக்கத்தை உன்னிப்பாகவும் ஆழமாகவும் ஆராய்ந்தால், அது சைவசமயக் கல்வி, தமிழ் மொழிக் கல்வி, தொழிற் கல்வி, தொழில் நுட்பக் கல்வி, முதியோர் கல்வி, முறைசாராக் கல்வி ஆகியவற்றை உள்ளடக்கிய பரந்த நோக்குடையதாக இருந்ததை அறியலாம்." (பக்.28)

எனக் குறிப்பிடுகின்றார். நாவலரைச் சைவக்காவலர் என்ற வகையில் மட்டும் சுருக்கி நோக்குபவர்கள் அவசியம் கவனத்திற் கொள்ள வேண்டிய கருத்து இது எனலாம்.

மேற்கண்டவாறு நாவலர் கல்வி மரபின் அடிப்படை அம்சங்களை விளக்கி உரைத்த பேராசிரியர், நாவலரின் நிறைவின் பின்னரான அம்மரபின் வரலாற்றை வளர்ச்சி, தளர்ச்சி என இரு நிலைகளில் காண்கிறார். நாவலர் தொடக்கி வைத்த முயற்சிகள் முறையாகப் பேணப்பட்டும் அவர் செயற்படுத்த விரும்பிய (ஆனால் அவரது வாழ்நாளில் நிறைவுறாதவையான) நிறுவன அமைப்புக்கள் உருவாக்கம் பெற்றும் வந்த நிலைகள் வளர்ச்சி எனப்படுகின்றன. பொதுவாக 1950ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியியை இவ்வாறான வளர்ச்சிக் காலப்பகுதியாகவே அவர் கருதுகிறார். அக்காலகட்டத்தின் பின்னர் 1960களை அடுத்துப் பாடசாலைகள் தேசீய மயமாக்கப்பட்ட சூழலைத் தொடர்ந்து பின்னுள்ள காலப்பகுதி தளர்ச்சி காலமாக அவரால் கணிக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சிக் காலகட்டத்தின் நிகழ்வுகள் என்ற வகையில் சைவபரிபாலன சபையின் உருவாக்கம். சைவ வித்தியா விருத்திச் சங்கம், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் முதலானவற்றின் தோற்றம் என்பன சுட்டப்படுகின்றன. மேலும் சைவ ஆசிரியர் பயிற்சிக்கெனக் கலாசாலைகள் உருவான வரலாறும் எடுத்துரைக்கப்

படுகின்றது. கிளிநொச்சியிலே சைவப்பிரசாரகருக்கான குருகுலப் பயிற்சி தொடங்கப்பட்டமை மற்றும் பல இடங்களிலே சைவம் சார்ந்த உயர் கல்விக் கூடங்கள் உருவானமை முதலான செய்திகளையும் பேராசிரியர் நமது கவனத்துக்கு இட்டு வருகிறார்.

இவ்வாறான பன்முகப்பட்ட நிறுவன நிலைச் செயற்பாடுகளை மேற்கொண்டு நாவலர் கனவுகளை நனவாக்க முயன்ற பெருமக்கள் என்ற வகையில் காரைநகர் அருணாசல உபாத்தியாயர், "இந்துபோட்" இராசரத்தினம், சேர் பொன். இராமநாதன், சேர் கந்தையா வைத்தியநாதன் மற்றும் சிவயோக சுவாமிகள் முதலான பலரின் பலவகைப் பங்களிப்புகள் இப்பகுதியிலே எடுத்துரைக்கப்படுகின்றன.

கடந்த அரைநூற்றாண்டுக் காலப்பபகுதியைத் தளர்ச்சிக் காலமாகக் காட்டும் பேராசிரியர் நாவலர் கல்வி மரபை முன்னெடுத்த நிறுவனங்களில் "தகுதியும் தரமும்" அற்ற பலர் நிர்வாகப் பொறுப்புகளில் அமர்ந்ததால் அவை தளர்ச்சியுற்றன எனக் காரணம் காட்டுகிறார். மேலும் 1961ஆம் ஆண்டில் பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்ட சூழ்நிலையில் சைவ நிறுவனங்கள் தாங்கள் நடத்தி வந்த பாடசாலைகளை அரசிடம் ஒப்படைக்க முற்பட்ட வேளையில் முன்யோசனையுடன் திட்டமிட்டுச் செயற்பட்டிருக்க வேண்டும் என்ற விமர்சனக் குறிப்பையும் முன் வைக்கிறார். குறிப்பாக நாவலர் நிறுவிய வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசலையானது அரசிடம் கையளிக்கப்படாமல் சைவப்பிரசாரகர்கள், குருமார்கள் என்போரை உருவாக்குவதற்கான பயிற்சிக்கல்லூரியாக மாற்றப் பட்டிருக்க வேண்டும் என்பது இவரது கருத்தாகும். மேலும் சைவ வித்தியா விருத்திச் சங்கம் தான் நடத்தி வந்த தொழிற் பயிற்சிப் பள்ளிகள் அநாதை இல்லங்கள் என்பனவற்றை இணைத்து வலுப்படுத்தி வளர்த்திருக்க முடியும் எனவும் ஆனால் அந்நிறுவனம் அவ்வாறு செயற்படத் தவறி விட்டது எனவும் பேராசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறாக நாவலர் கல்வி மரபு தளர்வுற்றமை பற்றிய தமது கவலையை உணர்த்திய பேராசிரியர் அவர்கள், சமகாலச் சைவசமயநிலை மற்றும் சைவநிறுவனங்கள் என்பவற்றிற் காணப்படும் குறைபாடுகளை நீக்குவதற்கு நாவலர் வழியிலே சில திட்டங்கள் உருவாக்கிச் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்துள்ளார். இவை "இன்றைய தேவை" என்ற தலைப்பில்

பேசப்படுகின்றன. இவ்வாறாக அவர் சிந்தித்துள்ளவற்றை முக்கியமான இரு பிரிவுகளில் அடக்கலாம்.

(அ) சிவாசாரியார்கள், சைவக் குருமார்கள், சைவப்பிரசாரகர்கள், ஓதுவார்கள் மற்றும் கோவில் நிர்வாக அலுவலர்கள் என்போருக்கான முறையான பயிற்சியும் பட்டத்தகுதியும் கௌரவமான ஊதியமும் பணிக்கான உத்தரவாதமும் வழங்கக் கூடிய சூழல் உருவாக வேண்டும் என்பதும் அவற்றுக்கான அமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதும்.

(ஆ) அனாதரவான சைவச் சிறார்களை ஆதரிக்கும் வகையில் உருவாகி இயங்கி வரும் அநாதை இல்லங்கள் பலவற்றிலும் நிலவி வரும் ஏற்றத் தாழ்வு நிலைகள் நீக்கப்பட்டு அவற்றிலுள்ள சிறார்கள் ஒரே சீரான ஆளுமை வளர்ச்சி வாய்ப்புக்களைப் பெற வழி வகுக்கப்பட வேண்டும் என்பது.

இவ்வாறான தேவைகள் முழுநிறைவில் செயற்படுத்தப்பட வேண்டுமானால் சைவசமயத்தக்கு வலுவான கட்டுக்கோப்பான ஒரு தலைமைத்துவக் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற தமது எதிர்பார்ப்பைப் பேராசிரியர் இங்கு முன் வைத்துள்ளார். இவ்வாறான அமைப்பானது அரசு நிலையிலான – அமைச்சு சார்ந்த – அங்கீகாரம் பெற்றதாகவும் துறவி ஒருவரைத் தலைவராகக் கொண்டதாகவும் சைவ விவகாரங்கள் அனைத்துக்குமான முடிவு கூறத்தக்க அதிகார வலுவுடையதாகவும் உருவாக்கப் பெற வேண்டும் என்பது பேராசிரியர் அவர்களுடைய கருத்தாகும்.

நாவலர் நிறுவிய முதற் கல்விக்கூடம் தனது 150 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடி வரும் சமகாலச் சூழலில் மேற்குறித்தவாறான திட்டங்களைச் சைவ உலகம் கவனத்திற் கொள்ள வேண்டும் எனவும் அதற்கேற்றவாறு ஒற்றுமைப்பட்டுச் செயற்பட வேண்டும் எனவும் அறைகூவல் விடுத்து இந்நூலை நிறைவு செய்கிறார் பேராசிரியர் அவர்கள்.

சமூகப் பொறுப்புள்ள ஒரு கல்வியாளர் என்ற வகையிலும் நாவலர் மரபை முன்னெடுக்கும் இந்து சாதனம் இதழின் ஆசிரியர் என்ற வகையிலும் பேராசிரியர் முன்வைத்துள்ள மேற்படி வரலாற்றுப் பார்வையும் சைவ உலகுக்கான அறைகூவலும் சமகாலச் சைவ

உலகால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கியத்துவம் உடையவை. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் பங்களிப்புக்களைச் சமகாலத் தலைமுறையினர்க்கு அறியத்தந்துள்ள வகையில் பேராசிரியர் சமூகப் பயன்மிக்க செயல் புரிந்துள்ளார் என்பதை இங்கு சுட்டுவது அவசியம். சமகாலத் தேவை என்ற வகையில் அவர் சுட்டியுள்ள அம்சங்கள் சமகாலச் சைவ உலகால் பரிசீலிக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் உடையனவாகும். அவற்றுட் குறிப்பாக, சைவத்துக்கான தலைமைப்பீடம் (ஈழத்தில்) நிறுவப்பட வேண்டும் என்ற வகையிலான அவரது முன்மொழிவு நாடு தழுவிய அளவில் – ஈழத்துச் சைவப் பெருமக்கள் புகலடைந்துள்ள உலக நாடுகள் தழுவிய அளவில் – விவாதித்து முன்னெடுக்கப்பட வேண்டிய ஒரு கருத்து நிலையாகும்.

இந்நூலிலே சமகாலச் சைவ உலகின் சமய நடைமுறைகள் தொடர்பான ஒரு எச்சரிக்கைக் குறிப்பைப் பேராசிரியர் அவர்கள் முன் வைத்துள்ளார். அக்குறிப்பு வருமாறு.

“கோவில்களைப் பெரிதாகக் கட்டுவதாலோ பெருஞ் செலவில் விழாக்களை நடத்துவதாலோ சமயத்தின் குறிக்கோளை அடைந்து விடமுடியாது. தமது சமய வாழ்வின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட வழிபடுநரும் தகுதி வாய்ந்த குருமாரும் அமையாத கோவில்கள் வெறும் கட்டடத் தொகுதிகளாகவும் களியாட்ட நிலையங்களாகவும் ஆகிவிடும் என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.” (பக். 47)

இக்குறிப்பை வழிமொழிந்து இந்த அணிந்துரையை நிறைவு செய்கின்றேன்.

இந்நூலாக்கத்தை வெளிக்கொணரும் கனடா, சைவசித்தாந்த மன்றத்தினர்க்கு – குறிப்பாக அதன் தலைவர், “**அன்புநெறி**” நிர்வாக ஆசிரியர் தி. விசுவலிங்கம் ஐயா அவர்களுக்குச் சைவ உலகின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலாநிதி நா. சுப்பிரமணியன்
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்
யாழ் பல்கலைக்கழகம், இலங்கை
14-12-2003

# சிறப்புரை

கனடா சைவசித்தாந்த மன்றம் வெளியிட்டுள்ள நாவலர் கல்வி மரபும் இன்றைய தேவையும் என்னும் இந்நூல் சிந்தனைக்கு விருந்தாகவும், செயலில் இறங்கத் தூண்டும் மருந்தாகவும் அமைந்துள்ள ஓர் அரிய படைப்பு.

படைத்திருப்பவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்து விஞ்ஞான பீடத்தின் முதுநிலைப் போசிரியர் கலாநிதி இ. குமாரவடிவேல் அவர்கள். நாவலர் பெருமான் 1848ல் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் நிறுவிய முதற் பாடசாலையாகிய சைவப்பிரகாச வித்தியாசாலை, அதன் நூற்றியம்பதாவது ஆண்டு விழாவைக் கொண்டாடிய போது பேராசிரியர் எழுதிய கட்டுரையே கனடா சைவசித்தாந்த மன்றம் மாதாந்த சஞ்சிகையாகிய "அன்புநெறி" யில் தொடர்ந்து வெளியிடப் பெற்று இப்பொழுது நூல் வடிவம் பெற்றுள்ளது.

பேராசிரியர் நாவலர் பெருமானின் கல்வி மரபைப் பலகோணங்களில் அணுகுகின்றார். அடக்கமான முன்னுரையில் "நாவலர் கல்வி மரபு" என்றால் என்ன? என்பதனை அழகுற விளக்கியபின், நாவலர் காலத்துச் சுதேசியக் கல்வி மரபின் குறைபாடுகளையும் தமிழ்க் கல்வி மரபில் அவர் புகுத்திய முக்கிய அம்சங்களையும் எடுத்துக் காட்டுகின்றார். அதனையடுத்து நாவலர் கல்வி மரபு சைவசமய வளர்ச்சியை மட்டுமன்றிச் சமுதாய வளர்ச்சியையும் நோக்காகக் கொண்டது என்ற உண்மையை உணர்த்துகின்றார்; தொடர்ந்து நாவலர் காலத்துக்குப் பின்பு அவரது கல்வி மரபு கண்ட வளர்ச்சிகளை விளக்குகிறார்; பின்பு நாவலர் கல்வி மரபு தற்போது தளர்ச்சி கண்டிருப்பதற்கான காரணிகளை ஆராய்கின்றார்; நிறைவாக நாவலர் கல்வி மரபை இக்காலத்தில் நாம் பின்பற்ற வேண்டிய தேவையை வலியுறுத்திப் பலவகையான செயல் திட்டங்களையும் பேராசிரியர் முன்வைக்கின்றார்.

செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்துதற்கு வலுவான கட்டுக்கோப்புள்ள தலைமைப் பீடம் ஒன்று சைவ சமயத்துக்கு வேண்டும். இத்தகையவொரு தலைமைப் பீடம் சைவசமயத்தை ஒழுங்கான முறையில் வளர்ப்பதற்குக் கனடாவிலும் அமைக்கப்பட

வேண்டும் என்று அடியேனும் சொல்லி வந்திருக்கின்றேன். “கனடாவிற் சைவசமயம்” என்ற எனது நூலிலும் (2000) இதனை வலியுறுத்தியிருக்கின்றேன்.

எனின், சைவசமயத் தலைமைப்பீடம் ஒன்றை அமைப்பதற்குத் தடையாக இருப்பது எம்மவர் மத்தியில் நிலவும் ஒற்றுமையீனமாகும். பேராசிரியர் குமாரவடிவேல் நாவலர் கல்வி மரபு மீண்டும் வீறு நடை போடவேண்டின் சைவத் தமிழ்ச் சமூகம் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்று கூறிக் கட்டுரையை நிறைவு செய்கின்றார். ஒற்றுமையின் அவசியத்துக்கு நாவலர் பெருமான் கூற்றையும் ஆதாரமாகக் காட்டுகின்றார்.

நாவலர் பெருமான் காலத்திலும் நம்மவர்கள் யாதாயினும் ஒரு கருமத்தை நடத்துவதற்கு ஒருங்கு கூடுதல் அரிதாக இருந்தது; இன்றும் இருந்து வருகின்றது. இதுவும் இக்கட்டுரையின் தேவைக்கு வலுவூட்டுகின்றது.

பேராசிரியரின் கருத்துக்கள் சைவ உலகத்தை விழிப்புறச் செய்ய வேண்டும் என்று எல்லாம் வல்ல சிவபெருமானை இறைஞ்சுகின்றேன்.

அரிய சைவ நூல்களை அவ்வப்போது வெளியிட்டு அறிவை வளர்க்கும் பணியையும் ஆற்றி வரும் சைவசித்தாந்த மன்றத்தினையும் பதிப்பாசிரியர் சைவப் பெரியார் திரு. தி. விசுவலிங்கம் அவர்களையும் பாராட்டுகின்றேன்.

சைவப் பெருமக்கள் இந்நூல் முன்வைக்கும் கருத்துக்களை உள்வாங்கி, உருவங் கொடுத்து நாவலர் பெருமானின் கல்வி மரபை வளர்த்து வாழ்வாங்கு வாழ்ந்து மேன்மை அடைவார்களாக!

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!

கவிஞர் கலாநிதி வி. கந்தவனம்
14-12-2003

# நாவலர் கல்வி மரபும் இன்றைய தேவையும்

நாவலர் பெருமான் சமயப் பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று மிக்க ஒரு அவதார புருஷர். மேலைத் தேசத்து கிறித்தவ மிஷனரிமார்கள் அன்றைய ஆங்கில அரசின் ஒத்தாசையுடன், சைவ சமயத்தவர்களை மதம் மாற்றக் கல்வியை ஒரு ஆயுதமாக உபயோகித்து வருவதைக் கண்டு வேதனை அடைந்த நாவலர் பெருமான், சுகபோகங்களை உதறித் தள்ளிவிட்டுத் தமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் தமிழ்க் கல்வியையும் சைவசமயத்தையும் வளர்ப்பதற்காக முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்.

நாவலர் பெருமான் தமது இளமைக் கல்வியைச் சுப்பிரமணிய உபாத்தியாயர், சரவணமுத்துப் புலவர், இருபாலைச் சேனாதிராய முதலியார் ஆகியோரிடத்து அக்காலத்து நிலவிய திண்ணைக் கல்வி மரபு வழியில் பெற்றவர். பத்து வயதின் பின் இப்போது யாழ் மத்திய கல்லூரி என அழைக்கப்படும் வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் கல்வி பயின்று அங்கு ஆசிரியராகவும் பணி செய்தவர். அதனால் அக்காலத்து மேலை நாட்டுக் கல்வி மரபையும் நன்கு அறிந்தவர். இரு கல்வி மரபையும் நன்கு அறிந்திருந்த நாவலர் அவர்கள் தமது காலத்தில் வழக்கிலிருந்த தமிழ்க் கல்வி மரபோடு மேலைத்தேசக் கல்வி முறையிற் கண்ட சிறப்பம்சங்களையும் உள்வாங்கி, தமிழ்க்கல்வி மரபில் மாற்றங்களை ஏற்படுத்தி, தமிழ்க் கல்வி மரபைச் செழுமைப்படுத்தியவர். அவ்வாறு செழுமையுற்ற கல்வி மரபையே நாவலர் கல்வி மரபு என்கிறோம்.

கிறித்துவ மிஷனரிமார்களின் மதமாற்ற முயற்சிகளைத் தடுத்து நிறுத்துவதற்கும் அவர்கள் செய்த சைவ தூஷணையை மறுத்துக் கண்டனஞ் செய்தவதற்கும் பெருமளவு நேரத்தைச் செலவு செய்ய வேண்டியிருந்ததால், தமது குறுகிய வாழ்நாளில் நாவலர் தாம் காணவிழைந்த கல்வியூடான சமய, சமூக மேம்பாடுகளில் ஒரு சிறு பகுதியைத்தான் நிறைவேற்றக் கூடியதாயிருந்தது என்பதை நாவலரது செயற்பாடுகள் பற்றி கிடைக்கும் தகவல்களை ஆழமாக ஆராய்ந்தால் புலனாகும்.

நாவலர் கல்வி மரபின் முக்கிய அம்சங்கள் என்ன? அம்மரபு அவர் காலத்தின் பின் எவ்வாறு கையாளப்பட்டது?

நாவலர் சிரஞ்சீவியாக இன்றும் வாழ்ந்து கொண்டிருந்தால், நாவலர் கல்வி மரபு எவ்வகையான மாற்றங்களை உள்வாங்கிச் செழுமையுற்றிருந்திருக்கும், நாவலருக்குப் பின் வாழ்ந்தவர்கள் நாவலர் கல்வி மரபைச் செழுமைப்படுத்தச் செய்த பங்களிப்புகள் யாவை, நாவலர் கல்வி மரபின் இன்றைய தேவை என்ன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

கல்வியென்பது பாடசாலைகளில் ஊட்டப்படும் போதனை மட்டுமல்ல. பாடசாலைகளில் ஊட்டப்படுவது நியமக் கல்வி, பாடசாலைக்கு வெளியிலும் கல்வி நிகழுகிறது. முறைசாராக் கல்வி, முதியோர் கல்வி என இக்காலத்தே அழைக்கப்படும் கல்வியும் இக்கட்டுரையில் கவனத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது.

## நாவலர் காலத்தில் நிலவிய தமிழ்ச் சுதேசியக் கல்வி மரபின் குறைபாடுகள்

*1.* தமிழ் கல்வியும் சைவசமயக் கல்வியும் ஒரு சில புலமையாளர்களின் ஏகபோகமாய் இருந்தமையும் சாதாரண மக்கள் தமது சைவசமய அறிவை வளர்த்துச் சமய அடிப்படை உண்மைகளைப் புரிந்து கொண்டு சீரிய வாழ்வு வாழவும் புறச்சமயத்தாரின் பொய்ப் பிரசாரத்தினால் மயக்கம் அடையா திருக்கவும் உதவக் கூடிய உண்மைக் கருத்துக்களை வாசித்து விளங்கிக் கொள்ளக்கூடிய எழுத்தறிவைப் பெரும்பாலான மக்கள் பெற்றிருக்காமையும்,

"சைவசமயிகள் சைவநூல்களைக் கல்லாமையினாலும் எங்கேனும் சிலர் கற்றாலும், அவர் பிறருக்குக் கற்பித்தலும் யாவரும் எளிதில் அறிந்து உய்யும்படி சமயாசாரங்களைப் போதித்தலும் இல்லாமையாலும், நமது சற்சமயமாகிய சைவசமயம் வரவரக் குன்றுகின்றது" என *1860*ஆம் ஆண்டு வெளியிட்ட விக்கியாபனம் ஒன்றில் நாவலர் பெருமான் குறிப்பிட்டுள்ளது நோக்கத்தக்கது.

2. சமய வாழ்வு என்பது ஏனையோர் – சமுதாயப் பெரியவர்கள் – கடைப்பிடித்து வந்த நடைமுறைகளைப் பாரம்பரியச் சடங்குகள் போலப் பின்பற்றப்பட்டதேயன்றி, சமய தத்துவக் கருத்துக்களைப் படித்தோ கேட்டோ அறிகின்ற – அவற்றைப் பிள்ளைகளுக்குப் படிப்பிக்க வேண்டுமென்ற கருத்தைக் கொண்டுள்ளவொரு

சமூகமாகத் தமிழ்கல்வி மரபு தமிழ்ச் சமூகத்தைப் பண்படுத்தத் தவறியமை, *1872* ஆம் ஆண்டு வெளியான "யாழ்ப்பாணச் சமய நிலை" என்ற பிரசுரத்தில், நாவலர் பெருமான், யாழ்ப்பாணச் சைவசமயிகள் பற்றிக் கூறிய பின்கண்ட கருத்துக்கள் இதனைக் கோடிட்டுக் காட்டுகிறது.

"யாழ்ப்பாணச் சைவ சமயிகள் சிவதீட்சை பெறுகிறார்கள். சமய சின்னங்கள் தரிக்கிறார்கள். ஆலய வழிபாடு செய்கிறார்கள். தல யாத்திரை போகிறார்கள். கோவில் கட்டிப் பூசை திருவிழாக்கள் செய்விக்கிறார்கள். விரதம் இருந்தும் அங்கப் பிரதட்சணம் செய்தும் உடம்பை வருத்துகிறார்கள். ஆனால் சமய தத்துவக் கருத்துக்களைப் படித்தோ கேட்டோ அறிகின்றார்கள் இல்லை. இவற்றைப் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கின்றார்கள் இல்லை."

3. கல்வியூட்டலைத் தரங்களாகப் பிரித்து ஒவ்வொரு தரத்திலும் கற்பித்தற்குரிய பாடவிதானங்களை வரையறை செய்து அதற்கேற்ற பாடநூல்களை ஆக்கி கல்வி முறையை ஒழுங்குபடுத்தி மாணவர் எட்டும் தராதரத்திற்கேற்பப் பட்டங்கள் வழங்கித் தராதரத்தை நிர்ணயிக்கும் வழிமுறைகள் இல்லாதிருந்தமை.

4. பழைய, அரிய, பெரிய நூல்கள் ஒரு சிலரிடையே ஏடுகளில் முடங்கிக் கிடந்தமை.

5. தமிழ், சைவ இலக்கிய ஆக்கங்கள், செய்யுள் நடையிலும் மணிப்பிரவாள (தமிழும் சமஸ்கிருதமும் கலந்த) நடையிலுமே வழக்கிலிருந்தமை. இதனால் குறைந்த அறிவுடைய மக்கள் வாசித்து அவ்வாக்கங்களை உணர முடியாத நிலையில் இருந்தமை.

6. சாதாரண மக்கள் – சிறப்பாகப் பெரும்பான்மையினரான வாசிக்கத் தெரியாதவர்களாக இருந்த மக்கள் – சமய அறிவைப் பெற்றுக் கொள்ளவும் பொருளாதார, சமூக அரசியல் விடயங்களில் அபிவிருத்திக்கு உகந்த வழிமுறைகளைத் தெரிந்து கொள்ளவும் அவர்களுக்கு மேடைப் பேச்சுக்கள் மூலம் அறிவும் விழிப்புணர்வும் ஏற்படுத்தும் முறை நடைமுறையில் இல்லாதிருந்தமை.

7. திருக்கோவில் அர்ச்சகர்கள், சிவாச்சாரியர்கள், சைவக் குருமார்களை ஒழுங்குமுறையாகப் பயிற்றுவித்துப் பட்டங்கள் வழங்கிச் சைவ சாஸ்திர தோத்திரப் பொருள் உணர்ச்சி உள்ளவர்களையே குருமார்களாக அமர்த்தும் ஒழுங்குபடுத்தப்பட்ட

கல்வித்திட்டமொன்று இன்றி, குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த எவரும் விதிக்கப்பட்ட தீட்சைகளைப் பெற்றுக் கொண்டால் குருத்துவம் செய்யலாம் என்ற வரையறை கொச்சைப் படுத்தப்பட்டு, சைவ சாஸ்திர தோத்திரப் பொருள் உணர்ச்சி அற்றவர்களும் குருமார்களாக இருந்தமை.

"கிறித்துவ குருமார்கள் மொழியையும் சமய நூல்களையும் படித்து தேர்வுகளில் சித்தியடைந்து எமது சமயத்தைப் பற்றியும் அறிந்து வைத்துக் கொண்டு பிரசங்கிக்கிறார்கள். ஆனால் எமது சமய குருமார்களுள்ளே சிலரொழிய மற்றவர்கள் அந்தியேட்டி பட்டோலை தானும், இன்னுஞ் சொல்லின் அந்தியேட்டி என்னும் பெயர் தானும் பிழையற எழுத அறியாதிருக்கிறார்கள். சிவாகமத்தில் ஒரு சுலோகமாயினும் தேவார திருவாசகங்களில் ஒரு பாட்டாயினும் திருக்குறளில் ஒரு குறளாயினும் அறியாதவர்களும் சைவசமயக் குருமாராக இருக்கிறார்கள். சைவ சாத்திரம் முதலியவற்றைப் படித்தற்கு அவர்களுக்குப் போதிய நேரமிருந்தும், படியாமல் வீண்பொழுது போக்குகிறார்கள்." என 1872 ஆம் ஆண்டு வெளியிடப் பெற்ற "யாழ்ப்பாணச் சமய நிலை" என்ற பிரசுரத்தில், நாவலர் பெருமான் அப்போதைய நிலையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

8. சைவக்குருமார்கள் சமய போதனை செய்தல், நல்லொழுக்க போதனை செய்தல், சமூகத்தை நல்வழிப்படுத்தல், சமய வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடல், புறச்சமயிகளின் சைவ விரோத பிரசாரங்களை எதிர்த்துப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடல், துன்பத்திற்கு உள்ளாகும் மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறுதல் போன்ற எந்தக் கடமையிலும் ஈடுபடுவதில்லை. இவற்றை மேற்கொள்ளக் கூடியவர்களாகக் குருமார்களைப் பயிற்றுவிக்கக் கூடிய – அவர்கள் முன்வராதவிடத்து இப்பணிகளைச் செய்யக்கூடிய சைவப்பிரசாரகர் களை உருவாக்கக்கூடிய – கல்வி மரபு இல்லாதிருந்தமை எமது கல்வி மரபின் ஒரு குறிப்பிடத்தக்க குறைபாடாகும்.

முற்குறிப்பிடப்பட்ட "யாழ்ப்பாணச் சமயநிலை" என்ற பிரசுரத்தில், நாவலர் அவர்கள் இக்குறைபாட்டைப் பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறார்:

"மக்கள் குருமாருக்கு மறுப்பில்லாது வந்தனத்தோடு தானியங்களும் உடுபிடவைகளும் தெட்சணையாகப் பணமும்

கொடுக்கிறார்கள். ஆனால் குருமார்கள் அம்மக்களுக்கோ அவர்களது பிள்ளைகளுக்கோ எமது சமயத்தையும் நல்லொழுக்கத்தையும் போதிப்பதில்லை. தீட்சை அளிப்பவர்கள் தெட்சணையை வாங்கிக்கொண்டு உடனே ஓட்டம் பிடிப்பதன்றி சில நாளாயினும் தாமதித்து இருந்து அனுட்டான முறையையும் சமய ஆசாரத்தையும் பழக்குகின்றார்கள் இல்லை. சைவ சமயத்தின் மகிமையைப் போதிக்கின்றார்கள் இல்லை. மதமாற்றத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்கின்றார்கள் இல்லை. தங்கள் பொருள் முட்டுப்பாடுகளையும் வீண்வார்த்தைகளையும் பேசுவதேயன்றி எமது சமயத்தின் பெருமை, வளர்ச்சி பற்றிப் பேசுவதில்லை. எம்மில் யாராவது இறக்க இருக்கும்போது அங்கு வந்து அவரது ஆன்மா நற்கதி அடையும் பொருட்டு அவருக்கு நல்லறிவுறுத்துவதில்லை.''

## தமிழ்க் கல்வி மரபில் நாவலர் புகுத்திய முக்கிய அம்சங்கள்

1. சைவப் பிள்ளைகள் தமது சமயத்தையும் மொழியையும் நன்கு அறிந்து உணர்ந்து ஒழுகக்கூடிய சமயக் கல்வியையும் உலகியலுக்கு வேண்டிய கணிதம், வரலாறு, புவியியல், தர்க்கம், ஆங்கிலம் போன்ற பாடங்களையும் கற்கக்கூடியதாக சைவப் பாடசாலைகள் நிறுவி நடத்தியமை; சைவப் பாடசாலைகளை ஆரம்பிக்கத் தூண்டு கோலாக இருந்தமை; இலவச காலை, மாலை வகுப்புக்கள் நடத்தியமை.

2. பாடசாலைக் கல்வியைத் தரங்களாகப் பிரித்து ஒவ்வொரு தரத்திலும் கற்பித்தற்குரிய பாட விதானங்களை வரையறை செய்து அதற்கேற்பப் பாடநூல்களை இலகு தமிழில் பாலபாடங்கள் என்ற பெயரில் யாத்தமை.

3. வினா–விடை வகையான நூல்களை முதன் முதலாகத் தமிழில் ஆக்கி அளித்தமை.

4. ஒரு சிலரிடையே ஏடுகளில் முடங்கிக் கிடந்த பழைய, அரிய, பெரிய நூல்களைப் பதிப்பித்து அவற்றைப் பலரும் வாசித்துப் பயனடைய வைத்தமை.

5. செய்யுள் நடையிலும் மணிப்பிரவாள நடையிலும் இருந்த ஆக்கங்களைக் குறைந்த அறிவுடைய மக்களும் இலகுவில் வாசித்து விளங்கிக் கொள்ளக் கூடிய முறையில் அவற்றை எளிய

வசன நடையில் எழுதியும் உரை எழுதியும் வெளியிடும் பணியை மேற்கொண்டமை.

"நிறைந்த கல்வி அறிவுடைய வித்துவான்களும் குறைந்த கல்வி அறிவுடைய பிறரும் ஆகிய யாவரும் எக்காலத்திலும் எளிதில் வாசித்து உணரும் பொருட்டும்.... கத்திய ரூபமாகச் செய்து வாசிப்போர்களுக்கு எளிதிலே பொருள் விளங்கும்படி பெரும்பான்மையும் சந்தி விகாரங்கள் இன்றி அச்சிற் பதிப்பித்தேன்" என்பது நாவலர் கூற்று.

செய்யுள் இயற்றும் திறன் இருந்தும் செய்யுள் நடை மக்களைக் கல்வி அறிவுடையவர்கள் ஆக்குதற்கு உகந்த சாதனம் அல்ல எனக் கருதி எளிய வசன நடையைக் கையாண்டதால் வசனநடை கைவந்த வல்லாளர் என நாவலர் போற்றப்பட்டார்.

6. சைவசமயத்தையும் தமிழையும் வளர்க்கப் பிரசங்கம் செய்யும் முறையை அறிமுகம் செய்ததுடன் அவ்வாறு செய்ய வேறு பலரையும் பழக்கியமையும் தமிழ்க் கல்வி மரபில் நாவலர் புகுத்திய செழுமை மிக்கதொரு மாற்றமாகும்.

தமிழ் மரபுக் கல்வியின் ஒரு அங்கமாகவும் – முதியோரது சமயக் கல்வியை வளர்ப்பதாகவும் – பொது சனத் தொடர்பு சாதனமாகவும் – விளங்கிய புராண படன மரபைப் பலப்படுத்தும் வகையில் அமைந்திருந்த இம்மாற்றம் சாதாரண மக்கள் – சிறப்பாகப் பெரும்பான்மையினரான வாசிக்கத் தெரியாத மக்கள்– மத்தியில் சமய, சமூக, பொருளாதார, அரசியல் அறிவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தி மதமாற்ற முயற்சிகளை மழுங்கச் செய்ததுடன் அவர்கள் ஒழுக்க வாழ்வு வாழவும் கல்வி கற்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டவும் பெரிதும் உதவிற்று.

புராண படனங்களில் கதைகள் வாயிலாக உணர்த்தப்படும் சமய தத்துவங்களும் ஒழுக்க நெறிகளும் கதைகளுடன் சேர்த்து விரித்துரைக்கப்படும். நாவலரின் பிரசங்கங்களோ சிந்தனையைத் தூண்டிச் சமய தத்துவங்களையும் விளக்கங்களையும் ஒழுக்க நெறிகளையும் நேரடியாகவே மனதிற் பதியச் செய்வனவாக அமைந்தன. நாவலரின் பிரசங்கங்களினால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட மாற்றங்களையும் விழிப்புணர்வையும் நீண்ட பட்டியல் இட்டுக் காட்டிய "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம்" என்ற நூலின் ஆசிரியரான த. கைலாசபிள்ளை அவர்கள் அப்பட்டியலைப்

பின்வரும் வாக்கியத்துடன் நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது:

"கல்வியிற் குறைவுடையோரும் கல்வி இல்லாதவருமாகிய இருதிறத்தாரும் கல்வியின் மேம்பட்ட செல்வம் பிறிதொன்று மில்லை எனக்கண்டு கல்வி கற்கத் தொடங்கினார்கள்."

த. கைலாசபிள்ளை அவர்கள் பிறிதோரிடத்தில்,

"முன்னிருந்த எங்கள் சமயாசாரியர்கள் தாம் தரிசனஞ் செய்யப் போன தலங்களில் எல்லாம் பதிகங்கள் அருளிச் செய்தார்கள். இவரோ தாம் போன இடங்களில் எல்லாம் லோகோபகாரமான சைவப் பிரசங்கங்கள் செய்து வந்தார். வசனம் போலப் பாட்டுக்கள் இக்காலத்தில் பிரயோசனம் உடையவைகள் அல்ல என்று கருதியே பாட்டுப் பாடுதலை இவர் குறைத்துக் கொண்டார்."

எனக் கூறியிருப்பது பிரசங்கம் செய்தலும் வசனநடை ஆக்கங்களும் தமிழ்க் கல்வி மரபைச் செழுமைப்படுத்த நாவலர் புகுத்திய புதிய வழிமுறைகள் என்பதைக் கோடிட்டுக் காட்டவேயாகும். பிரசங்கவன்மை காரணமாகத் தமிழ்மொழி மேடைப்பேச்சின் தந்தையெனப் போற்றப்படும் பெருமையையும் மிகக் குறைந்த வயதிலேயே திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானம் அவர்களால் 'நாவலர்' எனும் பட்டம் வழங்கப்பெற்ற சிறப்பினையும் நாவலர் பெருமான் பெற்றுக் கொண்டமை கருத்திற் கொள்ளத்தக்கது.

7. சாதாரண மக்கள் தமது சைவசமய அறிவை வளர்த்து சமய அடிப்படை உண்மைகளைப் புரிந்து கொண்டு சீரிய வாழ்வும் புறச்சமயத்தாரின் பொய்ப்பிரசாரத்தினால் மயக்கமடையாது இருக்கவும் வேண்டி சைவசமய உண்மைகளை எளிய வசன நடையில் அமைந்த துண்டுப் பிரசுரங்களாக எழுதி வெளியிட்டமை.

புறச்சமயத்தார்கள் சைவசமயத்தை இழிவு படுத்த முற்பட்டபோதெல்லாம் கண்டனங்களையும் பிரதிக் கண்டனங் களையும் எழுதி வெளியிட்டமை.

குருமார்கள் உட்படச் சைவசமயத்தவர்களே தமது சமயத்தைப் புரிந்து கொள்ளாது சைவத்திற்கு இசைவற்ற காரியங்களில் ஈடுபட்டபோது அவற்றைக் கண்டித்துச் சரியான வற்றைக் கண்டனங்கள் மூலம் வெளிப்படுத்தி அறிவூட்டியமை.

சைவப் பத்திரிகை ஒன்று நடத்தி மக்களது சமய அறிவை வளர்க்கும் தமது திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கோடு "உதயபானு" என்னும் பெயரில் பத்திரிகை ஒன்று வெளியிடும் தமது எண்ணத்தை விளம்பரம் ஒன்றின் மூலம் நாவலர் வெளியிட்டாராயினும் அத்திட்டம் அவரது காலத்தில் நிறைவேறவில்லை.

சைவப்பத்திரிகை மூலமும் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் அறிவூட்டுவது நாவலர் கல்வி மரபின் பிறிதொரு முக்கிய அணுகுமுறையாகும்.

8. சைவக் குருமார்களையும் சைவப் பிரசாரகர்களையும் சைவ ஆசிரியர்களையும் பயிற்றுவித்தல்.

சைவசமயம் நிலைத்துச் செழித்து மக்களை நல் வழிப்படுத்தும் ஒரு வாழ்க்கை நெறியாக விளங்க வேண்டுமாயின் சைவப் பெருமக்களும் திருக்கோவில் அர்ச்சகர்களும் சிவாச்சாரியர் களும் குருமார்களும் சைவ சாஸ்திர தோத்திரப் பொருளுணர்ச்சி பெறுதல் வேண்டும் என்பது நாவலரின் உறுதியான கருத்து.

நாவலர் கிறித்துவ பள்ளிக்கூடத்தில் படித்ததும் படிப்பித்ததும் பேசிவல் பாதிரியாருடன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பும் கிறித்தவ மிஷனரிகள் எவ்வாறு தம் சமயக் குருமார்களையும் போதகர்களையும் பயிற்றுவித்துச் சமயப் பிரசாரம் செய்கிறார்கள் என்பதை நன்கு அறிய வைத்தது. சைவ மக்கள் தமது சமய அனுட்டானங்களையும் கிரியைகளையும் வழிபாடுகளையும் விழாக்களையும் அவற்றின் அடிப்படைத் தத்துவங்களையும் பொருளையும் அறிந்து கொண்டு செய்தால் மட்டுமே அதன் பெறுபேறுகளைப் பூரணமாகப் பெறமுடியுமாதலால் சமய தத்துவங்கள் அவர்களுக்குப் போதிக்கப்பட வேண்டுமென்பது நாவலரது தீர்க்கமான நிலைப்பாடு. சைவாலயக் குருமார்கள் நன்கு பயிற்றுவிக்கப்பட வேண்டுமென்பதையும் அவர்கள் பூசைகள், கிரியைகள், விழாக்கள் நடத்துவதோடன்றி சமயப் பிரசார நடவடிக்கைகளிலும், வாழ்வின் அவலங்களில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு ஆறுதல் கூறி அரவணைக்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட வேண்டியவர்கள் என்பதையும் நாவலர் நன்கு உணர்ந்திருந்தார்.

சைவக் குருமார்களைச் சைவ சாத்திர தோத்திரப் பொருள் உணர்ச்சி பெற்றுச் சீர்திருந்தியவர்களாய் உண்மைச் சமயிகளாகவும்

சைவசித்தாந்த உணர்வுநிலை பதிந்தவர்களாகவும் வாழ வைப்பதற்குக் கல்வி யொன்றே சிறந்த சாதனம் என்பதை நன்கு உணர்ந்திருந்த நாவலர், சைவப் பிரசாரகர்களையும் குருமார்களையும் சைவாசிரியர்களையும் பயிற்றுவிக்கக்கூடிய பெரியதொரு பாடசாலையை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார். இதனைக் கிறித்தவர்கள் நடத்தும் இறையியற் கல்லூரிகளையும், ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளையும் ஒத்ததாக அமைய வேண்டும் என்ற நோக்கோடு திட்டமிட்டார். இப்பாடசாலையையும் மடத்தையும் சிதம்பரத்தில் அமைப்பதற்குப் பொருளுதவி கோரி 1868, 1870 ஆம் ஆண்டுகளில் பொதுமக்களுக்கு –சிறப்பாக சைவ அபிமானிகளுக்கு – துண்டுப் பிரசுரங்கள் மூலம் வேண்டுகோள் விடுத்தார். அப்பிரசுரமொன்றில் காணப்படும் ஒரு பந்தி பின்வருமாறு:

"நிலையில்லாத என் சரீரம் உள்ள பொழுதே என் கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோ என்னும் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக்கருத்து இது. தமிழ்க் கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாவதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலம் தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப் பிரசாரணஞ் செய்வித்தலுமேயாம். இவற்றின் பொருட்டுக் கிரமமாகக் கற்று வல்ல உபாத்தியாயர்களும் சைவப்பிரசாரகர்களும் வேண்டப் படுவார்கள். ஆதலினாலே, நல்லொழுக்கமும் விவேகமும் கல்வியில் விருப்பமும் இடையறா முயற்சியும் ஆரோக்கியமும் உடையவர்களாய்ப் பரீட்சிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து, அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்து, உயர்வாகிய இலக்கண இலக்கியங்களையும் சைவ சாத்திரங்களையும் கற்பித்தல் வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சி அடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப் பிரசாரகர்களாகவும் நியமிக்கலாம்."

நாவலர் தனது கருத்து தனது சீவிய காலத்திலேயே நிறைவேறுவதைக் காண ஆசைப்பட்டார். அந்த ஆசை நிறைவேறாது போகுமோ என இரவும் பகலும் கவலைப்பட்டார்.

"இத்தருமத்தை நானே நடத்தல் வேண்டும் என்னும் கருத்து எனக்கு இல்லை. 'யாவர் குத்தினும் அரிசியானாற் போதும்' என்றபடி யாவர் நடத்தினாலும் இத்தருமம் நிறைவேறினாற் போதும் என்பதே என் கருத்து"

என்ற அவரது கூற்றும்,

“அடியவர் குறை தீர்த்து ஆண்டருள்வதே விரதம் பூண்ட பெருங் கருணைக் கடலாகிய சிவபெருமான், நான் நல்லறிவும் நல்லொழுக்கமும் தம்மாட்டு மெய்யன்பும் சற்றுமுற்று அறியாப் பரம சண்டாளனே யாயினும், தமது சமயங் குன்றுதலைக் காண்டலின் கண்ணே பெருங் கவலையும் அச்சமயத்தை வளர்த்தலின் கண்ணே பேராசையும் உடைமையினாற்றானே என்னிம்மைப் பயன்கள் எல்லாவற்றையும் இழந்தும் பலராலே பலவகை இடையூறுகளை அனுபவித்தும் வருத்தமுறும் உண்மையைத் திருவுளங் கொண்டிரங்கி, என்கருத்தை யான் எடுத்த தேகம் விழுமுன் நிறைவேற்றியருளும் பொருட்டு, அவருடைய திருவடிகளைப் பணிந்து பிரார்த்திக்கிறேன்.”

என முடிவடையும் பிரசுரத்தின் இறுதிப் பந்தியும் அவரது உள்ளக் கிடக்கையை நன்கு படம் பிடித்துக் காட்டுவதுடன் வாசிப்போரை மெய்சிலிர்க்கவும் வைக்கிறது.

இவ்வுத்தமோத்தம தருமத்தை நிறைவேற்ற எண்பதாயிரம் ரூபா (இன்றைய கால கட்டத்தில் பல கோடி ரூபாவுக்குச் சமம்) தேவைப்படுமென மதிப்பிட்டு நிதி திரட்ட ஊர் ஊராகச் செல்லவிருந்தார். ஆனால் இந்தப் பெருமுயற்சி கைகூடுமுன் சிவபதம் அடைந்து விட்டார்.

சைவக் குருமார்கள், சைவப் பிரசாரகர்கள், சைவாசிரியர்கள் பயிற்சி நாவலர் காலத்தில் நிறைவேறாத நாவலர் கல்வி மரபின் ஒரு முக்கிய அங்கம் என்பது தெளிவு.

9. சைவசமய மேம்பாட்டில் அக்கறை உள்ளவர்களை ஒன்று கூட்டி சைவப் பிரகாச சமாஜம் என்ற பெயரில் சைவ நிறுவனம் ஒன்றை நாவலர் 1879ஆம் ஆண்டில் உருவாக்கினார். ஆனால் அதை நிலைகொளச் செய்வதற்கு அவர் அதிக நாட்கள் சீவிதராக இருக்கவில்லை. ஆகவே சைவசமயத்தை நிறுவனப்படுத்தி அதன் மூலம் சைவ சமூகத்தின் சமய, சமூக, கல்வி, பொருளாதார, அரசியல் நிலையை வலுப்படுத்துவதும் நாவலரின் குறிக்கோளாக இருந்தது எனக் கருதலாம்.

## நாவலர் கல்வி மரபு சைவசமய வளர்ச்சியை மட்டு மன்றிச் சமுதாய வளர்ச்சியையும் நோக்காகக் கொண்டது

நாவலர் கல்விப் பணியைப் பற்றி விமர்சிக்கும் சிலர், நாவலர் சைவ சமயத்தை வளர்க்கும் நோக்குடன் மட்டுமே கல்விப் பணி ஆற்றினார் என்ற கருத்தை முன் வைப்பதுண்டு. இது சரியான கருத்தல்ல.

நாவலர் காலத்திருந்த சூழ்நிலைகளே நாவலர் சைவசமயக் கல்வியை முதன்மைப்படுத்த வைத்தன. கிறித்து சமயத்தினர் தமது சமயத்தைக் கல்வியை ஊடகமாகக் கொண்டு வளர்த்துவர, சைவ மக்களும் குருமார்களிற் பெரும்பான்மையினரும் தமது சமயக் கருத்துக்களை அறியாதவர்களாய், அறிந்தோர் அறியாதவருக்குப் போதிக்காதவர்களாய் இருந்த நிலைமையே, நாவலரைச் சமயக் கல்விக்கு முதன்மை கொடுக்கும் கல்விக் கூடங்களை ஆரம்பிக்கத் தூண்டியது.

"கிறித்து சமயிகள் பெரும்பாலும் தங்கள் சமய நூலைத் தாங்கள் கற்றும், வெகு திரவியங்களைச் செலவழித்துப் பாடசாலை களைத் தாபித்துப் பிறருக்குக் கற்பித்தும், தங்கள் ஆலயங்களிலும் பிற இடங்களிலும் யாவருக்கும் போதித்தும், வருகிறபடியினாலே அவர்கள் சமயம் எத்தேசங்களிலும் வளர்ந்தோங்கி வருகின்றது" என்பது நாவலர் விக்கியாபனம் ஒன்றிலுள்ள கூற்று.

மிஷனரிகளால் யாழ்ப்பாணச் சமூகம் பெற்ற அனுகூலங்களை மதித்த நாவலர், அவர்கள் கல்வியை மதமாற்ற முயற்சிகளுக்கான ஊடகமாக உபயோகித்ததையே எதிர்த்தார்.

நாவலர் காலத்தில் கிறித்தவப் பாடசாலைகளிலும் சமயக் கல்வியும் ஆங்கிலமும் இலத்தீனும் தர்க்க சாத்திரமும் தமிழும் வரலாறும் புவியியலும் தான் கற்பிக்கப்பட்டன என்பதையும் அக்காலத்தில் இக்காலத்தைப் போல விஞ்ஞானக் கல்வி எங்குமே கற்பிக்கப்படவில்லை என்பதையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

நாவலர் பெருமான் தாபித்த முதற் பாடசாலையாகிய வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை மிஷனரிமார்களால் அக்காலத்தில் நடத்தப்பட்ட கிறித்தவ பாடசாலைகளிலிருந்து

இருவகையில் வேறுபட்டிருந்தது:

(அ) சிறித்தவ சமயப் போதனைக்குப் பதிலாகச் சைவசமய போதனை

(ஆ) கிறித்தவ பாடசாலைகளில் கிறித்தவ மத போதனை, ஆங்கிலம், லத்தீன், தமிழ் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டிருந்த இடம் சைவப் பாடசாலைகளில் முறையே சைவசமய போதனை, தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகியவற்றுக்கு வழங்கப் பட்டிருந்தது.

நாவலர் பாடசாலையில் கணிதம், தர்க்கசாஸ்திரம், வரலாறு, புவியியல், வானியல் யாவும் தமிழில் கற்பிக்கப்பட்டன. அங்கு பைபிளும் ஒரு பாட நூல் ஆக்கப்பட்டிருந்தது.

தொழில் வாய்ப்புப் போன்ற காரணங்களுக்காக ஆங்கில மொழி மூலக் கல்வியைப் பொது மக்களிற் சிலர் விரும்பிய போதும் அக்கல்வியைப் பெற்றுக் கொள்ளச் சைவ சமயிகளுக்கு அவர்களது சமயம் ஒரு தடையாக இருப்பதைக் கண்ட நாவலர் 1872ஆம் ஆண்டு தை மாதத்தில் வண்ணார்பண்ணையில் முதல் சைவ ஆங்கில பாடசாலையை ஆரம்பித்து நான்கு ஆண்டுகள் தொடர்ந்து நடத்தியமையும் அது பின்னர் அக்கால ஆட்சியாளர் மிஷனரிமார்களின் நெருக்குதல் காரணமாக நிதியுதவி அளிக்க மறுத்தமையால் மூடப்பட்டமையும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது.

சைவசமயிகள் தமது சமயத்தின் மகிமையை அறிந்து அதனைக் கைக்கொள்ளுதற்குரிய கல்வி போதிக்கப்படுதல் வேண்டும் – கல்வி என்ற போர்வையில் வேற்று மதங்கள் சைவ மக்களிடையே திணிக்கப்படுவதை அனுமதிக்கக் கூடாது – என்பனவே நாவலர் பெருமானின் கல்விக் கொள்கை என்பதையும் நவீன தொழில் நுட்பங்கள், அணுகு முறைகளை உள்வாங்கியும் ஆங்கிலம் போன்றதொரு நல்ல மொழியைக் கற்பித்தும் அதன் மூலம் மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் தராதரத்தை உயர்த்த வேண்டுமென்ற கொள்கையுடைய முற்போக்காளராக நாவலர் விளங்கியவர் என்பதையும் அழுத்திக் கூறவேண்டியது அவசியமாகிறது. அதனைக் கோடிட்டுக் காட்டும் நாவலரின் ஒரு சில செயற்பாடுகளை இங்கே நிரைப்படுத்துவோம்.

1. சமயக் கல்வியுடன் தொழிற் கல்வியையும் மாணவர்கள்

பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே நாவலர் கொள்கை.

"இம்மை மறுமைப் பயன்களுக்குத் துணைக்காரணமாய் உள்ள பொருளை ஈட்டுதற்கு வேண்டும் லௌகிக நூல்களைக் கற்பித்தலும், திருக்கோவில்கள் தோறும் சனங்களுக்குச் சமயநெறியைப் போதித்தலும் மிக மேலாகிய புண்ணியங்களாம்" என அவர் விக்கியாபன மொன்றில் குறிப்பிட்டிருப்பது இதனைத் தெளிவு படுத்தும்.

2. அச்சு இயந்திர உதவியுடன் மிஷனரிமார் செய்த சமயப் பிரசார, கல்விப் பணிகளைக் கண்ணுற்ற நாவலர் தாமும் அவ்வாறே செயற்படக் கருதித் தமது இருபத்தெட்டாவது வயதில் யாழ்ப்பாணத்தில் கிறித்தவர் அல்லாத ஒருவரால் தாபிக்கப்பட்ட முதல் அச்சியந்தரசாலை ஒன்றின் உரிமையாளராகி நூல்களைப் பதிப்பித்திருக்கிறார். முதன் முதலாக ஒரு புதிய இடத்தில் ஒரு புதிய இயந்திரத்தைத் தாபித்தவர் அதன் தொழில் நுட்பத்தை நன்கு உள்வாங்கியிருப்பார் என்பதையும் அங்கு பணியாற்றுதற்குப் பல உதவியாளர்களைப் பயிற்றுவித்திருப்பார் என்பதையும் உய்த்தறிந்து கொள்ளலாம். இதனை ஆவணப்படுத்தப்படாத கல்விப் பணியெனக் கொள்ளலாம்.

3. மேடைப்பேச்சு–பிரசங்கம் போன்றவற்றைச் சமய அறிவூட்டுதற்கான கருவிகளாக மட்டும் நாவலர் உபயோகப் படுத்தவில்லை. பொதுக் கூட்டங்களைக் கூட்டி மக்களைத் திரட்டி அவர்களுக்கு நன்மை பயக்கக் கூடிய பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், அவர்களைப் பாதிக்கக்கூடிய அரசியல் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றிப் பிரசங்கித்து அவர்களுக்கு அறிவூட்டவும் மேடைப்பேச்சை ஒரு கருவியாக நாவலர் உபயோகித்தார்.

யாழ்ப்பாண மட்டக்களப்பு வர்த்தக வேளாண்மைச் சங்கம் பற்றியவொரு துண்டுப் பிரசுரத்தில்,

"எம் ஊரவர்களுக்கு இக்கொம்பனியின் வழிவகையும் அதன் நயமும் சற்றும் தெரியாததின் நிமித்தம் எமது பத்திரிகையில் தோன்றுகின்ற விளம்பரப்படி ஓர் பிரசங்கம் சைவப் பிரகாச வித்தியாசாலையில் நடக்கும். அங்கு விரித்துக் காட்டப்படும் கூட்டத்தாருடைய நய முதலானவைகளைக் கேட்டுப் பயன் அடைவீர்களாக"

என நாவலர் குறிப்பிட்டிருப்பது பொருளாதார மேம்பாடு அடைவது பற்றி மக்களுக்குக் கல்வியூட்டுவதும் நாவலர் கல்வி மரபினுள் அடங்குவதைக் காட்டுகிறது.

நாவலர் சமயப் பிரசாரகராக மட்டுமன்றி விவசாயப் பிரசாரகராகவும், அரசிடமிருந்து மக்கள் கோரக்கூடிய நிவாரணங்கள் பற்றி அவர்களுக்கு விளக்கமளிக்கும் பிரசாரகராகவும், அநீதியையும் சமூக ஊழல்களையும் எதிர்த்துப் பிரசாரம் செய்யும் பிரசாரகராகவும், அரசியல் தலைமைத்துவத்தை நிர்ணயிக்கும் பிரசாரகராகவும் செய்த பணிகள், அநீதியை எதிர்க்கும் உரிமை, தொழில் விருத்தி, அடிப்படை உரிமை அரசியல் உரிமை பற்றியெல்லாம் மக்களுக்கு அறிவூட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தியமை ஆகிய செயற்பாடுகள் அக்கால சூழ்நிலையில் முதியோர் கல்விக்கு நாவலர் ஆற்றிய குறிப்பிடத்தக்க பங்களிப்புகள் எனலாம். இதனை நாவலர் அறிமுகப்படுத்திய முதியோர் கல்வி மரபெனக் குறிப்பிடலாம்.

4. யாழ்ப்பாண மட்டக்களப்பு வர்த்தக வேளாண்மைச் சங்கத்தில் பங்குகள் பெற்றுப் பயனடையுமாறு 1877ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் இலங்கைநேசன் பத்திராதிபரோடு இணைந்து அப்பத்திரிகையில் நாவலர் பெருமான் வெளியிட்ட அறிக்கையில்,

"இம் முயற்சியினால் உண்டாகும் நன்மையின் பெறுபேற்றை எவ்வளவு கொண்டு அளக்கினும் முடியாது! முடியாது!!.... இவ்வயற் செய்கை எம் ஊரவர்கள் செய்கிற ஏராணி கொண்டு நடத்தப்படுவது என்பது கூடாத காரியம். இங்கிலீசிய மாதிரியான சூத்திரங்களைக் கொண்டே அதிகமாக வேலை நடக்கும்......" எனக் கூறியிருப்பதிலிருந்து மேல்நாடுகளில் நடைமுறைப் படுத்தப்பட்டு வெற்றி கண்ட நவீன விவசாய முறைகளைப் பயின்று பயிற்றுவித்து – அறிமுகப்படுத்தி – நவீன தொழில் முறைகளை மக்களுக்கு அறிமுகம் செய்து (முறைசாராக்) கல்வியை விருத்தி செய்வதும் நாவலரின் அபிலாசையாக இருந்தது என்பது தெளிவு.

மேற்குறிப்பிட்ட அறிக்கையிலே இன்னுமோரிடத்தில், யாழ்ப்பாண மட்டக்களப்பு வர்த்தக வேளாண்மைச் சங்கத்தில் பங்குகள் பெற்றுக் கொள்வதால் "எத்தனை அறிவாளிகளுக்கு உதவி" எனக் குறிப்பிடுவது இத்திட்டத்தின் கீழ் அறிவாளிகள் நவீன விவசாயத் தொழிற் பயிற்சி பெறுவர் என்பதைச் சூசகமாகத் தெரிவிக்கிறது. நவீன தொழில் நுட்பங்களையும் தொழில் முறைகளையும் உள்வாங்கிக் கொள்ள நாவலர் சிறிதும் பின்னிற்கவில்லை என்பதும் இவற்றிலிருந்து தெளிவாகிறது.

5. நாவலர் இளம் வயதிலேயே அறிவியற் கலைகளையும் பிறவற்றையும் சந்தேகமும் விபரீதமும் அறக் கற்கும் கருத்துடையவராக விளங்கியமையும் கருத்திற் கொள்வது பொருத்தமானது. தமக்குள்ள ஐயங்களைப் பிறர் வாயிலாகக் கேட்டுத் தெளிய வேண்டும் என்ற கருத்து உடையவராகவும், ஏன்? எப்படி? என வினாவும் அறிவியல் அணுகுமுறை உடையவராகவும் நாவலர் விளங்கினார். இதற்கு 1841ஆம் ஆண்டு புரட்டாதி–மார்கழி மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் – தமது பத்தொன்பதாவது வயதிலே – உதயதாரகை பத்திரிகையில் ஆசிரியருக்குக் கடிதங்களாக ஒளியியல் பற்றிய வினாக்களை (optical queries) தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிப் பிரசுரித்து ஆரோக்கியமான விவாதத்தில் ஈடுபட்டமை கோடிட்டுக் காட்டுகிறது.

6. சமயத் தொடர்பற்ற பழைய தமிழ் இலக்கியங்களும் அழிந்து போகாமற் காப்பாற்றப்பட வேண்டும் என்பதும் நாவலரின் கொள்கையாக இருந்தது. “வளையாபதி” என்ற பழம் பெரும் காப்பிய நூலைப் பதிப்பிக்க இருப்பதாக அறிவித்திருந்தமை இதற்கு நல்லதொரு எடுத்துக் காட்டு.

மேற்தரப்பட்ட உதாரணங்கள் தொழிற்கல்வி, முதியோர் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, விஞ்ஞானக் கல்வி, சமய சார்பற்ற தமிழ் இலக்கியம் ஆகியவற்றிலும் நாவலருக்கிருந்த ஆர்வத்தையும் அக்கறையையும் பிரதிபலிக்கின்றன.

ஆகவே, நாவலர் கல்வி பற்றிய நோக்கத்தை உன்னிப்பாகவும் ஆழமாகவும் ஆராய்ந்தால், அது சைவசமயக் கல்வி, தமிழ்மொழிக் கல்வி, தொழிற் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, முதியோர் கல்வி, முறைசாராக் கல்வி ஆகியவற்றை உள்ளடக்கிய பரந்த நோக்குடையதாக இருந்ததை அறியலாம்.

## நாவலர் காலத்தின்பின் நாவலர் கல்வி மரபு கண்ட வளர்ச்சிகள்

நாவலர் மறைவின்பின் ஐம்பதுக்குக் குறையாத அவரது விசுவாசிகளும் மாணவர்களும் தனித்தனியாக நாவலர் கல்வி மரபின்படி சைவத்தையும் தமிழையும் பாதுகாக்கவும் வளர்க்கவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். இன்னுஞ் சிலர் ஒன்று சேர்ந்து இயங்க முயன்றனர். அதன் பலாபலனாக சைவ பரிபாலனசபை

என்ற அமைப்பு உருவாகியது. இச்சபையின் நோக்கங்கள் நாவலரின் இலட்சியங்கள் அனைத்தையும் உள்ளடக்கி இருந்த போதிலும் அச்சபை சைவ ஆங்கிலக் கல்லூரிகள் நிறுவுதல், சைவப் பிரசங்கங்கள் செய்வித்தல், சைவ நூல்களை வெளியிடல், பத்திரிகை நடத்துதல் ஆகியவற்றிலேயே கூடுதல் கவனஞ் செலுத்தியது. யாழ் இந்துக் கல்லூரி உட்பட சில இந்துக் கல்லூரிகளை நிறுவியும் இந்துசாதனம் பத்திரிகையை வெளியிட்டும் பல தமிழ், சைவ பாடநூல்களையும், இதர நூல்களையும் வெளியிட்டும் நாவலர் கல்வி மரபைப் பேணிய பெருமை இச்சபைக்கு உண்டு.

நாவலர் கல்வி மரபை அடியொற்றிச் சைவப் பாடசாலை களைத் தருமவான்கள் பலரும் தத்தம் ஊர்களில் நிறுவினர். அதற்காக அயராது உழைத்தவர்களுள் காரைநகர் அருணாசல உபாத்தியாயரின் பணி மகத்தானது. இவரது பங்களிப்பை நாவலரின் மருகரான தம்பு கைலாசபிள்ளை அவர்கள் பின் கண்டவாறு மதிப்பீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

“யாழ்ப்பாணத்திலுள்ள சைவாசிரிய கலாசாலைக்கு முதற் காரணம் ச. அருணாசலமே. பரோபகாரிகள் என்று யாழ்ப்பாணத்தில் பிறந்தவர்களுள் இரண்டாவதாக நான் மதித்திருப்பது இவரையே. ஆசிரிய கலாசாலைக்காகத் தங்காலத்தையும் பொருளையும் செலவு செய்து இவர் செய்த முயற்சிகள் பல.”

அருணாசல உபாத்தியாயர் அவர்கள் தாமும் பல சைவப் பாடசாலைகளை அமைத்ததுடன் ஊர்கள் தோறும் பாடசாலைகள் அமைக்கப்படத் தூண்டு கோலாகவும் விளங்கினார். 1880களில் அமெரிக்க மிஷன் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் கற்றதன் மூலம் பெற்ற அனுபவத்தின் காரணமாக நாவலர் இலட்சியங்களுள் ஒன்றாகவிருந்து, அவர் காலத்திலே நிறைவேறாமற் போன சைவாசிரியர்கள் பயிற்சிக் கல்லூரி அமைக்கும் எண்ணத்தை நனவாக்க அருணாசல உபாத்தியாயர் அல்லும் பகலும் அயராது உழைக்கலானார். முதன் முதலில் காரைநகரில் சைவாசிரியக் கலாசாலை ஒன்றை 1910களில் நிறுவி ஆசிரிய மாணவர்களுக்கு உணவும் உடையும் உறையுளும் கொடுத்துத் தகுந்த ஆசிரியர்களைக் கொண்டு நடத்தினார். மிஷனரிமார்களின் எதிர்ப்பால் இக்கல்லூரிக்கு அரச அங்கீகாரம் கிடைக்கவில்லை. 1914ஆம் ஆண்டில் இக்கல்லூரி கீரிமலையில் ஏரம்பையர் குடியிருந்த மடத்திற்கு மாற்றப் பெற்று அங்கு இரண்டு ஆண்டுகள்

நடைபெற்றது. இங்கும் அரச அங்கீகாரம் கிடைக்காது போகவே கலாசாலையை வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியா சாலைக்கு மாற்றினர். இங்கும் அரச அங்கீகாரம் கிடைக்கவில்லை. போதிய இடவசதி இல்லை எனக் காரணங் காட்டப்பட்டது. இவ்வளவு நடந்தும் உபாத்தியாயர் சளைக்கவில்லை. கீரிமலையில் கல்லூரி நடத்தியபோது அங்கு அடிக்கடி வருகை தந்த இளம் சட்ட வல்லுனரான (பிற்காலத்தில் இந்து போட் இராசரத்தினம் என அழைக்கப்பட்ட) சு. இராசரத்தினம் என்பவருடன் ஏற்பட்ட தொடர்புகளை தன் இலட்சியம் நிறைவேற நன்கு உபயோகப் படுத்திக் கொண்டார்.

திரு. இராசரத்தினம் அவர்கள் மூலம் தமிழ் அரசியல் வாதிகளான சேர். பொன். இராமநாதன், சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி, சேர். பொன். அருணாசலம், சேர். அம்பலவாணர் கனகசபை போன்றவர்களின் அறிமுகம் உபாத்தியாயருக்குக் கிடைத்தது. அவர்களின் உதவியுடன் மேற்கொண்ட கடும் பிரயாசையின் பயனாகக் கோப்பாய் அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை ஐக்கிய போதனாசிரியர் கலாசாலையாக மாற்றம் பெற்று 1916ஆம் ஆண்டு முதல் அங்கு சைவாசிரியர்களும் பயிற்சி பெறும் வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் சைவாசிரியர் பயிற்சிப் பகுதிக்கு முகாமையாளராக இருந்த உபாத்தியாயர் அவர்களின் மறைவோடு அப்பகுதி தளர்வுற்று 1923ஆம் ஆண்டில் அரசினரால் மூடப்பட்டது.

இவ்வாறான சூழ்நிலையில் 1923ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் திரு (இந்துபோட்) இராசரத்தினம், சேர். பொன் இராமநாதன், சேர். வை. துரைசுவாமி, வட்டுக்கோட்டை எம். எஸ் இராசரத்தினம், சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் ஆகியோர் சைவ வித்தியா விருத்திச் சங்கம் என்ற நிறுவனத்தை உருவாக்கி நாவலரது தமிழ்ச் சைவப் பாடசாலைகளும் சைவாசிரிய கலாசாலையும் அமைக்கும் திட்டத்தைப் பெருமளவில் பூர்த்தி செய்தனர். 1939 ஆம் ஆண்டில் சைவ சமயிகளுக்கு ஒரு விஞ்ஞாபனம் என்ற துண்டுப் பிரசுர மூலம் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் செயலாளராக விளங்கிய திரு. இராசரத்தினம் (இந்துபோட்) அவர்கள் இச்சங்கத்தைத் தோற்றுவித்தற்கான காரணங்களைப் பின்வருமாறு விளக்கியிருந்தார்.

“இப்பொழுது கிறித்தவர்கள் இங்கே நடத்துகின்ற வேலை மரத்தை வளர்க்கின்றோம் வளர்க்கின்றோம் என்று அதன் வேரிலே

மெல்ல மெல்ல வெந்நீர் ஊற்றுகின்ற வேலை. தோளிலேயிருந்து காதிலே தாவுகின்ற வேலை என்றும் சொல்லலாம். ஒல்லாந்தர் போல மரங்களைத் தறிக்கிறோம், இதோ முறிக்கின்றோம் என்று இவர்கள் சத்தம் போடுவதில்லை. சார்ந்திருந்து காரியம் பார்க்கின்றவர்கள் இவர்கள். எங்கள் குழந்தைகளைக் கொண்டே எங்கள் சமயத்துக்குக் கொள்ளி வைப்பிக்க முயலுகிறார்கள்!.... நாவலர் அவர்களுக்குப் பிறகு கிறிஸ்தவர்களின் சூழ்ச்சிகளை அறிந்த சைவப் பிரமுகர்கள் சிலர் தனித்துங் கூடியும் பல சைவப் பாடசாலைகளையும் கல்லூரிகளையும் தாபித்தார்கள். எவ்வளவு முயன்றும் கிறிஸ்தவர்களின் நெருக்கடியை நீக்க முடியவில்லை. இதனை உணர்ந்த சேர். பொன். இராமநாதன், சேர். வை. துரைசுவாமி, வட்டுக்கோட்டை எம். எஸ் இரசரத்தினம் முதலியவர்களும் எங்களிற் சிலரும் சேர்ந்து 1923ஆம் ஆண்டிலே சைவ வித்தியா விருத்திச் சங்கத்தைத் தாபித்தோம்.''

திரு. இராசரத்தினம் அவர்களது இக்கூற்று, அவர் நாவலரின் கல்வி மரபைத் தொடருவதில் எவ்வளவு ஆன்மார்த்தமாகச் செயற்பட்டார் என்பதைக் காட்டுகிறது. நாவலரின் பல இலட்சியங்களுக்குச் செயல்வடிவம் கொடுத்தவர் இந்துபோட் இராசரத்தினம் அவர்கள். தமிழில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் என அழைக்கப்பட்ட இந்நிறுவனம் ஆங்கிலத்தில் Hindu Board of Education என அழைக்கப்பட்டதால் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் ''இந்துபோட்'' இராசரத்தினம் எனவே அழைக்கப்பட்டார். இவரின் முயற்சியால் 1928ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் திருநெல்வேலியில் அமைந்த தனியார் வீடொன்றில் 22 மாணவர்களுடன் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது. இது 1939இல் சொந்தக் கட்டடங்களுடன் தனியானதொரு கல்வி நிறுவனமாகப் பரிணமித்தது. 1963ஆம் ஆண்டுவரை இது ஆயிரத்து ஐநூறுக்கும் அதிகமான சைவ ஆசிரியர்களை உருவாக்கியது. ''கற்று வல்ல உபாத்தியாயர்கள் நூற்றுவரை பயிற்றுவித்து நியோகித்தல்'' என்ற நாவலர் பெருமானின் இலட்சியத்தை நனவாக்கியவர் திரு. இராசரத்தினம் அவர்கள்.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் 1958ஆம் ஆண்டு அறிக்கைப்படி அக்காலகட்டத்தில் இந்நிறுவனத்தின் கீழ் ஏழு ஆங்கிலப் பாடசாலைகளும் நூற்றிநாற்பத்தேழு தமிழ்ப் பாடசாலைகளும் பெண்களுக்கும் ஆண்களுக்குமாக இரு ஆசிரியப்பயிற்சிக் கல்லூரிகளும் நடத்தப்பட்டன.

1930களில் திரு. இராசரத்தினம் அவர்கள் ஆண்களுக்கும் பெண்களுக்குமாக இரு அநாதை இல்லங்களை உருவாக்கினார். அவ் அநாதை இல்லங்களில் வாழ்ந்த பலரையும் கல்வி ஊட்டிப் பல்துறை அறிஞர்களாக உருவாக்கினார். நாவலரின் “அன்னம், வஸ்திரம் கொடுத்து மாணவர்களைக் கற்பித்தல்” என்ற இலட்சியத்தையும் முதன்முதல் நனவாக்கியவர் திரு. இராசரத்தினம் அவர்களே.

திரு. இராசரத்தினம் அவர்கள் மேலும் ஒரு படி சென்று நாவலர் கல்விக் கொள்கையின் ஒரு அங்கமாயிருந்த தொழிற்கல்வி அளித்தல் என்ற இலட்சியத்திற்கும் செயல் வடிவம் கொடுத்தார். 1958ஆம் ஆண்டில் சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிய பதினைந்து நெசவுப் பள்ளிகளிலும், பதினாறு கூடை இழைக்கும் பள்ளிகளிலும் நூற்றுக் கணக்கானோர் தொழிற்கல்வி பெற்றனர்.

நாவலர் கல்வி மரபை மேலும் செழுமைப்படுத்துவதில் முக்கிய இடத்தை வகித்த இன்னொருவர் சேர் பொன். இராமநாதன் அவர்களாவர். அவர் 1913 இல் நிறுவிய இராமநாதன் கல்லூரியும் 1921 இல் நிறுவிய பரமேஸ்வராக் கல்லூரியும் நாவலர் மரபைப் பிரதிபலிப்பனவாக அமைந்த இரு பெரும் கல்விக் கூடங்களாகும். நாவலர் அமைத்த சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் இராமநாதர் அமைத்த இரு கல்லூரிகளிலும் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய மொழிகள் சிறந்த புலமையுள்ள அறிஞர்களால் கற்பிக்கப்பட்டன. பரமேஸ்வராக் கல்லூரி யாப்பின்படி அக்கல்லூரியில் “சைவ மாணவர்களுக்கு அளிக்கப்படும் கற்கை நெறிகளிலே வழக்கமாக இடம்பெறும் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், லத்தீன் முதலியவற்றுடன் வேதங்கள், சைவாகமங்கள், தர்மசாஸ்திரங்கள் புராணங்கள், இதிகாசங்கள், முதலியவற்றில் கூறப்பட்டுள்ள ஆன்மீக சிந்தனைகள் **நடைமுறை உலகியல் வாழ்க்கையில் பின்பற்றப்படும் வகையில் புகட்டப்படும்.** நால்வர் தேவாரங்களும் தாயுமான சுவாமிகளின் திருப்பாடல்களும் கற்பிக்கப்படும்....” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இராமநாதன் கல்லூரியிலும் பரமேஸ்வராக் கல்லூரியிலும் சைவ ஆசிரியர் பயிற்சியும் இடம்பெற்றிருந்தது. பரமேஸ்வராக் கல்லூரியில் பண்டிதர் வகுப்புகளும் சித்த ஆயுர்வேத வைத்தியக் கற்கை நெறி வகுப்புகளும் காவியப் பாடசாலை வகுப்புகளும் இடம்பெற்றன.

திருக்கேதீச்சரத்தில் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களது அயரா முயற்சியால் அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்களை அதிபராகக் கொண்டு அமைக்கப்பட்ட சிவானந்த குருகுலம் என்ற சிவாச்சாரியர்கள் பயிற்சிக் கல்லூரி நன்கு திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டத்துடன் *1962*ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுச் சிறப்பாக இயங்கியதாயினும் பல்வேறு காரணங்களால் அதன் செயற்பாடுகள் இடை நிறுத்தப்பட்டுவிட்டது.

இராமநாதன் கல்லூரிக்கான அறக்கட்டளையின் நோக்கங் களிலே சைவாலயங்களிலே பூசகர்களாக நியமிக்கப்படவுள்ள இளைஞர்களைப் பயிற்றுவிக்கும் திட்டமும் இடம் பெற்றுள்ளது. இந்த நோக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் கடந்த சில ஆண்டுகளாக இயங்கி வரும் “சேர் பொன் இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனம்” என்ற அமைப்பினால் ஓரளவுக்கு நிறைவேற்றப்பட்டு வருகிறது. நன்கு வடிவமைக்கப்பட்ட ஒரு பாடத்திட்டத்துடன் மெச்சத்தக்க பணியை இந்நிறுவனம் ஆற்றி வருகின்ற போதிலும், நாவலரின் மனத்திருந்த சைவப்பிரசாரகர்களையும் சைவக் குருமார்களையும் பயிற்றுவிக்கும் பெரியளவினதானதொரு கல்லூரியின் நோக்கத்தை எட்டுமளவிற்கு அது வளர்ச்சி அடையவில்லை என்றுதான் கூற வேண்டும்.

சைவாசிரிய கலாசாலை முன்னோடி என நாம் ஏற்கனவே குறிப்பிட்ட காரைநகர் ச. அருணாசல உபாத்தியாயர் அவர்கள் கீரிமலையில் சைவ ஆதீனமொன்று அமைத்துச் சைவப் பிரசாரகர்களை உருவாக்கத் திட்மிட்டாராயினும் அது கைகூடு முன் அவர் இறைவனடி சேர்ந்து விட்டார்.

நாவலரின் ஐந்தாண்டுத் திட்டம் என அழைக்கப்படும் சைவக்குருமார் சைவப்பிரசாரகர்கள் பயிற்சிக் கல்லூரி போன்றதோர் திட்டம் சிவயோக சுவாமிகளால் *1950*ஆம் ஆண்டளவில் பிரேரிக்கப்பட்டுக் கிளிநொச்சி வடிவேற் சுவாமிகளால் அநுவதிக்கப்பட்டு சுவாமிகளின் சீடர் ஒருவரால் “கிளிநொச்சி ஆதாரக் கல்வி குருகுலம்” என்ற பெயரில் கால்கோள் செய்யப்பட்டு மூன்று ஆண்டு சைவபோதகர் பயிற்சி நாற்பது மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இம்முயற்சி பூரணத்துவம் பெற்றுச் சிறக்க சைவ சமூகம் உதவ முன்வராததாலும் சமகால நிகழ்வுகளாலும் இம்முயற்சி தொடரப்படாது கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியில் நாவலர் கல்வி மரபைச் செழுமைப் படுத்தியவர்களுள் புலோலியூர் சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை ஆற்றிய பங்கும் போற்றுதற்குரியது. சைவச் சூழலில் ஆங்கிலக் கல்வியையும் தமிழ்க் கல்வியையும் வளர்த்தெடுப்பதிலும் கிறிஸ்தவ மதமாற்ற முயற்சிகளை முறியடிப்பதிலும் ஆலயங்களிலும் சமூகத்திலும் நிலவிய சீர்கேடுகளைக் களைவதிலும் இளம் பாடசாலை மாணவர்களுக்கும் வளர்ந்தவர்களுக்கும் சைவத்தின் மகிமையை விளக்கும் இலகு தமிழ் நடை நூல்களை ஆக்கி அளித்த செயற்பாடுகளிலும் சைவசமய போதனையைச் சீரமைப்பதிலும் கட்டாயச் சமயக் கல்வியை அரச கொள்கையாக அங்கீகரிக்க வைப்பதிலும் அவர் ஆற்றிய பணிகளைச் சீர்தூக்கிப் பார்ப்பவர்கள் இவரை நாவலரின் வாரிசு எனவே கொள்வர். தனது வாழ்வைச் சைவ மக்களின் கல்வி மேம்பாட்டுக்காக முற்றுமுழுதாக அர்ப்பணித்த தவசிரேட்டர் அவர்.

நாவலர் மறைவின் பின் சிதம்பரத்திலும் வண்ணார் பண்ணையிலும் அமைந்த சைவப்பிரகாச வித்தியாசாலைகள் உட்பட்ட நாவலரின் தருமங்களுக்கு நாவலரின் முதன் மாணாக்கன் என்ற ரீதியில் திரு. ந. க. சதாசிவம்பிள்ளை அவர்கள் முகாமையாளராகக் கடமையாற்றினார். அவர்பின் த. கைலாசபிள்ளை அவர்கள் இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இவர்கள் இருவரும் நாவலர் மரபைப் பின்பற்றி நாவலர் தருமச் சொத்துக்களைக் கொண்டு பல நற்பணிகளைச் செய்தனர். இவற்றில் முக்கியமானது வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடத்தப்பட்டு வந்த காவிய பாடசாலையாகும். இக்காவிய பாடசாலையில் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், தம்பு கைலாசபிள்ளை, வித்துவான் சுப்பையாபிள்ளை ஆகியோர் ஆசிரியர்களாக விளங்கினர். அக்காவிய பாடசாலையிற் கல்வி கற்று அதன் பயனாக மதுரைத் தமிழ் சங்கத்து பண்டிதர் தேர்வில் சித்தி பெற்றவர்களுள் முதன்மையானவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களாவார். காவிய பாடசாலையினாற் பெற்ற அனுகூலங்களை மனதிற் கொண்ட பண்டிதமணி அவர்கள் 1935ஆம் ஆண்டில் இந்து போட் இராசரத்தினம் அவர்களின் அனுசரணையுடன் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் காவிய பாடசாலையொன்றை ஆரம்பித்து நடத்தி வந்தார். அங்கு பிரவேசபண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் வகுப்புகளும், மதுரைத் தமிழ்ப் பண்டித வகுப்புகளும் வடமொழிப்பண்டித வகுப்புகளும் நடத்தப்பட்டன. இக்காவிய

பாடசாலை 1938 வரை சிறப்புடன் இயங்கிப் பல நூற்றுக்கணக்கான பண்டிதர்கள் உருவாகக் காரணமாயிருந்தது.

நாவலர் பாடசாலையிலும், சிறிது காலம் திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் பரமேஸ்வராக் கல்லூரியிலும் நடைபெற்று வந்த காவிய பாடசாலைகளிலே பயின்ற மாணவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் நடத்தப்பட்ட பாலபண்டிதர், பண்டிதர் பரீட்சைகளுக்கும் சென்னை சைவ சித்தாந்த சமாஜத்தினர் நடத்திய இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வுகளுக்கும் தோற்றினர். 1961 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் அவ்வாண்டு முதல் இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வுகளை நடத்திப் பட்டமளித்து வருகின்றது.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார் சைவ சித்தாந்த பிரவேச பண்டிதர், சைவ சித்தாந்த பாலபண்டிதர், சைவ சித்தாந்த பண்டிதர் தேர்வுகளை நடத்திப் பட்டமளித்து வருகின்றனர். அத்துடன் பாடசாலை மாணவர்களிடையே வருடந் தோறும் சைவநெறித் தேர்வுகளையும் நடத்தி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தினர் பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் வகுப்புகளை நடத்தி வருகின்றனர்.

1960ஆம் ஆண்டில் பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்ட போது வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியா சாலையும் அரசிடம் கையளிக்கப்பட்டது. அப்போது இவ்வித்தியா சாலையுடன் இணைந்த நாவலர் தர்மச் சொத்துக்களைப் பராமரித்து அவற்றால் வரும் வருமானங்களை நாவலரது குறிக்கோள்களை அடைய உபயோகப்படுத்தும் நோக்கத்துடன் நாவலர் தர்மகர்த்தா சபையொன்று அமைக்கப்பட்டது. இச்சபை காவிய வகுப்புக்கள் சமஸ்கிருத வகுப்புக்கள் பண்ணிசை வகுப்புக்கள் போன்றவற்றை நடத்தி வந்த போதிலும் அவை செழிப்படையவில்லை.

மேற்கூறியவற்றில் இருந்து 1850, 1900ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட அரை நூற்றாண்டு காலத்தை நாவலர் கல்வி மரபு முகிழ்ந்த காலமெனவும் 1900, 1950ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட அரைநூற்றாண்டு காலத்தை நாவலர் கல்வி மரபு ஆழ வேரூன்றிக் கிளைவிட்டுப் பூத்துக் குலுங்கிய காலமெனவும் கூறலாம்.

## நாவலர் கல்வி மரபு தற்போது தளர்ச்சி கண்டிருப் பதற்கான காரணிகள்

கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் நாவலர் கல்வி மரபை மேலுஞ் செழுமைப்படுத்திப் பேணும் முயற்சிகள் தளர் வடைந்துள்ளது என்பது கவலைக்குரிய ஆனால் மறுக்கமுடியாத உண்மையாகும். அவற்றிற்கான காரணங்கள் கசப்பானவை.

(அ) பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் உருவாகி நாவலர் கல்வி மரபை முன்னெடுத்துச் சென்ற நிறுவனங்களுக்குள்ளே நிலவிய உட்பூசல்கள்.

(ஆ) தலைமைப் பதவிகளை அவாவிய சிலர் பிறிதொருவரின் தலைமையின் கீழ் நிறுவனச் செயற்பாடுகள் விருத்தியடைவதைக் காணச் சகியாதவராய் நிறுவனத்தின் செயற்பாடுகள் சீராக நடைபெற ஒத்துழைப்பதற்குப் பதிலாக முட்டுக்கட்டை போட்டமை.

(இ) பொறுப்பான பதவியிலிருந்தோரிற் சிலர் அப்பதவி தமது ஆயுள் வரை நீடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு செயற்பட்டமையும் தமக்குப்பின் தமது பணிகளை முன்னெடுத்துச் செல்லக்கூடிய அர்ப்பணிப்பு மிக்க இளந்தொண்டர்களைப் பயிற்றுவித்து தமது பணி தம் காலத்தின் பின்பும் தொடர்வதுடன் மட்டுமன்றிச் செழிப்படையவும் வேண்டுமென்ற நோக்கத்துடன் செயற்படாது போனமை. உடல் நிலை தளர்ந்த நிலையில் தமது பொறுப்புக்களையும் பணிகளையும் படிப்படியாக அப்பணிகளைச் செய்யக் கூடியவர்களிடம் காலாகாலத்தில் கையளியாமை.

(ஈ) சொத்துக்கள் சேர்ந்திருந்த நிறுவனங்களில் பொறுப்பான பதவிகளில் அமர்ந்திருந்தோரிடம், அச்சொத்துக்கள் தங்கள் நண்பர்களும் உறவினர்களுமான ஒரு சிறு கூட்டத்தாரின் கட்டுப்பாட்டிலேயே இருத்தல் வேண்டுமென்ற மனோநிலை உருவானது காரணமாக அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய உண்மைத் தொண்டர்கள் தாமுந் தம் நிறுவனத்துள் புகுந்து விடக்கூடாது என்ற வகையிற் செயற்பட்டமை.

(உ) ஆழ்ந்த சமய அறிவும் சமய உணர்வும் பற்றும் தொண்டு மனப்பான்மையும் இல்லாதவர்கள்–பேர் புகழுக்காகச் சமயவாதிகளாகக் காட்டிக் கொண்டவர்கள் – சமய நிறுவனங்களின் பொறுப்பான பதவிகளைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கையெதிலும் ஈடுபடாதிருந்தமையும்

ஆழ்ந்த சமய அறிவும் சமய உணர்வும் பற்றும் தொண்டு மனப்பான்மையும் கொண்டவர்களின் கருத்துக்கள் மதிக்கப்படாது விடப்பட்டமையும் ஏளனஞ் செய்யப்பட்டமையும்.

(ஊ) ஆழ்ந்த சமய அறிவும் சமய உணர்வும் பற்றும் தொண்டு மனப்பான்மையும் கொண்டவர்களையன்றி, பெரும் பதவிகளில் உள்ளவர்களைச் சமய சம்பந்தமான விழாக்கள் கூட்டங்களில் தலைமை வகிக்கவும் பேசவும் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர் என்ற மகுடத்தின் கீழ், பேச அழைக்கப்பட்டும் கௌரவிக்கப்பட்டும் சைவசமயம் பற்றி யாரும் எப்படியும் எதுவும் பேச முடியும் என்ற நிலையை ஒரு சிலர் ஏற்படுத்த, அதனைப் பலரும் பின்பற்றியமை. அதன் காரணமாகக் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான உண்மைச் சமய உணர்வு கொண்டோரைத் தாமாகவே ஒதுங்கி வாழும் நிலையை ஏற்படுத்தியமை.

இவையும் இவை போன்ற இதர காரணங்களும் சைவசமய நிறுவனங்கள் பலவும் செயலற்றுப் போனமைக்கு அல்லது குற்றுயிருடன் இயங்குவதற்குக் காரணமாக அமைந்தன என்பது கசப்பான உண்மை.

*1961*ஆம் ஆண்டில் பாடசாலைகள் தேசியமயமாக்கப் பட்டபோது ஒவ்வொரு கிறித்துவ மதப்பிரிவினரும் மிகுந்த தீர்க்க தரிசனத்துடன் நடந்து கொண்டனர். அதற்குக் காரணம் அவ்வொவ்வொரு பிரிவினருக்கும் ஒரேயொரு தலைமைப்பீடம் அமைந்திருந்தமையாகும். இரு பெரும் கிறித்து மதப் பிரிவின் தலைமைப் பீடங்களும் தத்தமக்கென ஒருசில பாடசாலைகளை அரசிடம் கையளிக்காது வைத்துக் கொண்டன. மாணவர் தங்கிப் படிக்கக்கூடிய பாடசாலைகளையே அவ்வாறு வைத்துக் கொண்டனர். அதற்கு வலுவான காரணங்கள் இருந்தன. அவர்கள் பொறுப்பேற்கும் ஆதரவற்ற சிறார்கள் இவ்விடுதிகளிற் தங்கியிருந்துதான் கல்வி கற்கிறார்கள். அவர்களுக்கு அங்கு மேலதிக பாடங்கள் போதிக்கப்படுகின்றன. இறுதியில் அவர்கள் நன்கு கற்றுத்தேர்ந்து நல்ல தொழில் வாய்ப்பு பெறுகிறார்கள். அல்லது குருமனைகளில் சேர்ந்து போதகர்களாகவும் சமய ஊழியர்களாகவும் மாறி விடுகிறார்கள். சைவநிறுவனங்களோ பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்ட போது தங்கள் கல்விப்பணி அத்துடன் முடிவடைந்து விட்டது போல் நடந்து கொண்டன. அவை தீர்க்க தரிசனத்துடன் நடந்து கொண்டதாகக் கூறுவதற்கில்லை. அவை தீர்க்க தரிசனத்துடன் நடந்து கொண்டிருப்பின் (நாவலர்

பெருமான் நிறுவிய) வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையை அரசிடம் கையளிக்காது அதனை நாவலரின் பெருவிருப்பாக அமைந்ததும் நாவலர் ஐந்தாண்டுத் திட்டம் எனப் பேசப்படுவதுமான சைவப்பிரசாரகர்கள், குருமார்கள் பயிற்சிக் கல்லுரியாக மாற்றியிருப்பர். சைவபரிபாலன சபையின் புண்ணியநாச்சி தருமச் சொத்துக்கள், மழவராயர், சேர் பொன் இராமநாதன் போன்றோர் கல்விப்பணிக்காக விட்டுச் சென்ற சொத்துக்கள் ஆகியவை விவேகமான முறையிற் பயன்படுத்தப்பட்டு நன்கு திட்டமிடப்பட்டவொரு சைவப்பிரசாரகர்கள், குருமார்கள் பயிற்சிக் கல்லூரியாக அதனை மாற்றி அமைத்திருக்கலாம். அவ்வாறானதொரு நிலை ஏற்படாமைக்கான காரணம் ஒவ்வொரு சைவசமய நிறுவனமும் தாம் – சைவத்தை வளர்ப்பதென்ற – பொது நோக்குடையவொரு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள். ஆகவே அதே குறிக்கோள்களையுடைய இதர நிறுவனங்களுடன் கலந்து பேசி நன்மை விளைவிக்கக்கூடிய பொதுத் திட்டங்களைத் தீட்டித் தமது பொதுக் குறிக்கோளை அடைய முயல வேண்டும் என்ற பரந்த நோக்கின்றி தத்தம் சொத்துக்களைத் "தாமே கட்டியாள வேண்டும்" என்ற குறுகிய மனப்பான்மையோடு செயற்பட்டமை யேயாகும். இதன் பலாபலனையும் அவை கண்டுவிட்டன. அவை ஒவ்வொன்றுமே தமது சொத்துக்களிற் பெரும்பகுதியை ஏதோ ஒரு வழியில் இன்று இழந்து நிற்கின்றன.

பாடசாலைகள் தேசியமயம் ஆக்கப்பட்டபோது சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர் தம் நிர்வாகத்தின் கீழிருந்த பாடசாலைகள் அனைத்தையும் அரசிடம் கையளித்தனர். அது தவிர்க்க முடியாததே. ஆனால் அவர்கள் தம்மால் நடத்தப்பட்டு வந்த அநாதை இல்லத்தைத் தொடர்ந்து நடத்துவதுடன் திருப்தி அடைந்து விட்டனர். ஏறத்தாழ நூற்றியைம்பது பாடசாலைகளையும் இரு அநாதை இல்லங்களையும் முப்பதிற்கு மேற்பட்ட தொழிற் பயிற்சிப் பள்ளிகளையும் நடத்தி வந்த இச்சங்கத்தினர் பாடசாலைகளை அரசிடம் கையளித்த பின்னர் தமது முழு வளங்களையும் பயன்படுத்தி அநாதை இல்லங்களுடன் இணைத்து தொழிற் பயிற்சிப் பள்ளிகளை விரிவு படுத்தி முறைசாராக் கல்வியை நன்கு வளர்த்தெடுத்திருக்க முடியும். அது நடை பெறவில்லை. இதுவும் ஒரு தீர்க்க தரிசனமற்ற செயற்பாடே. இவ்விடயத்திலும் சைவ நிறுவனங்கள் கலந்து பேசி கல்வி மேம்பாட்டிற்கான பல ஆரோக்கியமான செயற் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப் படுத்தியிருக்க முடியும். கையிலிருப்பதை விவேகமான முறையிற் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற

குறிக்கோளுடன் சைவ நிறுவனங்கள் செயற்படவில்லை என்பது கசப்பான உண்மை. இத்தொடர்பில் கிறித்தவ நிறுவனங்கள் எவ்வாறு நடந்துகொண்டன என்பதை இன்று யாழ்ப்பாணத்தில் முறைசாராக் கல்வியை வழங்கும் நிறுவனங்களிற் பெரும்பாலானவையாரால் நடத்தப்படுகின்றன என்பதை ஆராய்ந்தால் தெரியவரும்.

## இன்றைய தேவை

*1.* பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டு எல்லாப் பாடசாலைகளிலும் ஒரே விதமான பாடவிதானங்கள் நடைமுறைக்கு வந்த பின் நாவலர் கல்வி மரபு அவர் அமைத்த பாடசாலையிற்றானும் நடைமுறைப் படுத்தப்படுவது தளர்ச்சி கண்டது. இன்றைய பாடசாலைக் கல்வி முறையில் சமய அறிவூட்டலிலும் சமய வளர்ச்சிப் பணிகளிலும் பாடசாலைகளின் பங்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். ஆகவே பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்ட பின் சமயப்பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு பாடசாலைகளிலிருந்து பிறிதோர் வகை நிறுவனம் ஒன்றுக்கு மாற்றப்பட்டிருக்க வேண்டுமாயினும் அது நடைபெறவில்லை. அவ்வாறு மாற்றப்பட்டிருக்க வேண்டிய நிறுவனம் நாவலரால் முன்வைக்கப்பட்ட சைவக்குருமார் பிரசாரகர்கள் பயிற்சிக் கல்லூரியே. அது நாவலரின் பாடசாலையிலேயே அமைந்திருந்தால் மிகப் பொருத்தமாக இருந்திருக்கும்.

சைவசமய உண்மைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய பிரசாரகர்களையும் திருமுறை ஓதவல்ல ஓதுவார்களையும் ஆலய வழிபாட்டு விளக்கமுள்ள நிருவாக உத்தியோகத்தர்களையும் சைவாலய நித்திய நைமித்திகங்களையும் சைவ இல்ல பூர்வ அபரக் கிரியைகளையும் செய்வதோடு அமையாது மக்களுக்குச் சமய தத்துவங்களை விளக்கி அவர்களுக்கு இக்கட்டான சமயங்களில் அவர்களை அணுகி மன ஆறுதலளிக்கும் உபதேசங்களைச் செய்து அவர்களை சமயநெறி வாழப் பயிற்றுவிக்கக்கூடிய குருமார்களையும் பிரசாரகர்களையும் பயிற்றுவித்துப் பட்டமளிக்கக்கூடிய பயிற்சிக் கலாசாலை ஒன்று நிறுவப்படுவது நாவலர் பெருமானின் விருப்பத்தையும் இன்றைய அவசரத் தேவைகளுள் ஒன்றையும் நிறைவேற்றுவதாக அமையும்.

காலத்தின் தேவைகளுள் முக்கியமான தொன்றாகக் கருதப்படும் இப்பயிற்சிக் கல்லூரி அதன் தரத்தில் நாட்டிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளின் தரமளவினதாகவேனும் இருத்தல்

வேண்டும். இக்கல்லூரி வழங்கும் பட்டங்களை வேறெவரும் வழங்க முடியாத சட்டவரையறை இருத்தல் வேண்டும். இக்கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குக் கௌரவமான ஊதியம் வழங்கப்பட வேண்டும். இக்கல்லூரியில் பயிற்சியும் பட்டமும் பெற்று வெளியேறுபவர்களுக்கு ஆலயங்களில் சிவாச்சாரியர்களாக, சைவக்குருமார்களாக, சமயப்பிரசாரகர்களாக, ஓதுவார்களாக, நிர்வாக அதிகாரிகளாக சேவை செய்யும் வாய்ப்பு உத்தரவாதப் படுத்தப்படவேண்டும்.

இக்கல்லூரியில் தமிழ் சமஸ்கிருத ஆங்கில மொழிகள் கிரந்த இலிபி, சைவசித்தாந்தம், வேத அத்தியயன ஸ்தோத்திர பாராயணப் பயிற்சி, பண்ணிசைப் பயிற்சி, சைவத்தமிழ் இலக்கியங்கள், சைவாகமங்கள், சைவாகமக்கிரியை பயிற்சி, சைவ–இந்து சமய வரலாறும் பண்பாடும், சோதிடம், பொதறிவு (சமூகவியல், உளவியல், சுகாதாரக் கல்வி, சமய ஒப்பீட்டுக்கற்கை) ஆகியன போதிக்கப்படல் வேண்டும். முயற்சி செய்தால் இப்போது கூட அரசின் ஒப்புதல் பெற்று நாவலர் பாடசாலையை மேற்குறித்த பயிற்சிக் கலாசாலையாக மாற்ற முடியும். நாவலர் பாடசாலைச் சுற்றாடலில் வேறு பல பாடசாலைகள் இருப்பதும் நாவலர் பாடசாலையில் இப்போ கல்வி பயிலும் மாணவர் தொகை குறைவாக இருப்பதும் இதற்குச் சாதகமான அம்சங்களாகும்.

நாவலர் நிறுவிய முதற்பாடசாலை அதன் நூற்றியைம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இச்சமயத்தில் அதன் நினைவாக நாவலர் தர்மகர்த்தா சபையினர் நாவலரது நூல்களை வெளியிட்டும் அவர் வெளியிட்ட நூல்கள், கண்டனங்கள், ஆவேதனங்கள் ஆவணங்கள் யாவற்றையும் உள்ளடக்கிய சைவத்தமிழ் நூல்நிலையம் ஒன்றை இப்பாடசாலையில் அமைத்தும் இப்பாடசாலை நாவலரின் கனவினை நனவாக்குமொரு சைவப்பிரசாரகர் குருமார் பயிற்சிக் கல்லூரியாகப் பரிணமிக்கவும் இதய சுத்தியுடன் கருமமாற்றிப் பெருமுயற்சி செய்ய வேண்டியது அவசியம்.

2. சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினரால் இந்து போட் இராசரத்தினம் அவர்களின் அர்ப்பணிப்பு மிக்கமுயற்சியின் பயனாக– உருவாக்கப்பட்ட திருநெல்வேலி சைவச்சிறார் இல்லத்தோடு இணைந்ததாக முறைசாராக் கல்வி நிறுவனங்கள் பல உருவாக்கப்படவேண்டும்.

3. அநாதரவான சைவச் சிறார்களை ஆதரித்து வளர்க்க

உருவான முதல் நிறுவனம் திருநெல்வேலி சைவச்சிறார் இல்லம். இப்போது யாழ் குடாநாட்டில் பல சைவச்சிறார் இல்லங்கள் இயங்குகின்றன. இவற்றிற் சில சிறு சிறு குழுக்களாலும் சில தனியாராலும் நடத்தப்படுகின்றன. இவ்வாறான இல்லங்களை நடத்துவதற்கு சமீபத்தில் இந்நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து மேலை நாடுகளில் வாழும் சைவ மக்களிடமிருந்து பெருந்தொகைப் பண உதவி கிடைக்கின்றது. எவ்வளவு பணம் கிடைக்கிறது என்பது நிறுவனத்தை நடத்துபவர்களது செல்வாக்கிலும் நம்பத்தகு தன்மையிலும் தங்கியுள்ளது. சில இல்லங்களுக்கு மேலதிக பணம் சேருகின்றது. சில பண நெருக்கடிக்கு உள்ளாகின்றன. இவ்வாறான பிரச்சினைகள் கிறிஸ்தவர்களால் நடத்தப்படும் இல்லங்களுக்கு ஏற்படுவதில்லை. அவையாவும் ஒரு தலைமைப்பீடத்தின் கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றமையே அதற்கான காரணமாகும்.

இலகுவாக வெளிநாட்டில் நிதி திரட்டி நடத்தக்கூடிய, சமூக மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்ட–முற்போக்கான சிந்தனையுள்ள–பணி என்பதால் இவ்வாறான இல்லங்கள் அமைத்து நடத்துவது ஒரு நாகரிகமாகக் (fashion) கூட சிலரால் கருதப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இச்சைவச் சிறார் இல்லங்களில் வாழும் பிள்ளைகளது ஆளுமை எவ்வாறு வளர்க்கப்படுகின்றது, அவர்களது பிற்கால வாழ்வு எவ்வாறு அமைகிறது, அவர்கள் வளர்ந்தபின் என்ன செய்கிறார்கள் போன்ற வினாக்களுக்கு விடை தரக்கூடிய தகவல்கள் இல்லை. தற்போது சைவசமயத் தருமப் பணிகளில் பேரார்வத்துடன் செயற்படும் செஞ்சொற்செல்வர் திரு. ஆறு. திருமுருகன் அவர்கள் இதுபற்றி ஆய்வு செய்யும் நல்லதொரு முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அறிகிறோம். எமக்குக் கிடைத்த உறுதிப்படுத்தப்படாத சில தகவல்களின் படி ஒரு சில இல்லங்களில் வாழ்ந்த சிறார்களில் ஒரு சிலர் பல்கலைக்கழகம் வரை சென்றிருக்க வேறு சில இல்லங்களில் வாழ்ந்தவர்கள் ஒரு குறிப்பிட்ட வயதின் பின் அங்கிருந்து நீக்கப்பட்டு விடுவதாக அறியக்கிடக்கிறது. பிற்கூறியது உண்மையாயின் அதுவொரு சரியான அணுகுமுறை அல்ல. உணவும் உடையும் உறையுளும் ஆரம்பக்கல்வியும் அளிப்பதுடன் இவ்வில்லங்கள் தம்பணியை நிறுத்திவிடக்கூடாது.

இவ்வில்லப் பிள்ளைகள் எவ்வாறு வளர்த்தெடுக்கப் படுகிறார்கள் என்பது முக்கியம். அவர்களுக்கு நல்ல பழக்க

வழக்கங்களும் சமய உணர்வும் ஊட்டப்படுவதோடு சிறந்த கல்வியும் ஊட்டப்படுதல் வேண்டும். அவர்களது ஆளுமை நன்கு வளர்க்கப்பட வேண்டும்.

இவ்வில்லங்களின் பராமரிப்பாளர்கள் நல்ல ஆளுமையும் அர்ப்பணிப்பும் சமய உணர்வும் தொண்டு உள்ளமும் கொண்டவர்களாக மட்டுமன்றி உளவியற் பயிற்சி பெற்றவர்களாகவும் இருந்தாற்றான் நற்பயன் தரும். ஆகவே இவ்வில்லங்களைப் பராமரிப்பவர்களுக்குப் பயிற்சி அளிப்பது கவனத்திற்கு எடுக்க வேண்டிய ஒரு முக்கியமான அம்சம்.

இச்சிறார்கள் எந்தத் துறையில் திறமை காட்டுகிறார்கள் என்பதை அவதானித்து அத்துறையில் அவர்களது திறமையை விருத்தி செய்யச் சிறு வயது முதலே ஊக்குவிக்க வேண்டியது அவசியம். உரிய முறையில் வழிகாட்டப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டால் இவர்களுள் ஒரு பகுதியினர் நாம் மேலே குறிப்பிட்ட சைவப்பிரசாரகர்கள் பயிற்சிக் கல்லூரியினாற் பயிற்றுவிக்கப்பட்டு முழுநேர சைவ ஊழியர்களாகப் பணியில் அமர்த்தப்படலாம். ஒரு சிலர் இச் சிறுவர் இல்லங்களைப் பராமரிக்கும் பணியில் அமர்த்தப்படலாம். இன்னுஞ் சிலர் கீழே முன் வைக்கப்படும் சைவத் தலைமைப் பீடச் செயலகத்தின் வெவ்வேறு தரங்களில் அமையும் பதவிகளில் அவரவர் தகுதிக்கேற்ப அமர்த்தப்படலாம். இத்திட்டத்தின் வெற்றி நாம் அச்சிறுவர்களை எந்தளவுக்குத் தொண்டுள்ளமும் சேவை மனப்பான்மையும் சமய உணர்வும் உடையவர்களாக வளர்த்தெடுக்கிறோம் என்பதில் பெரிதும் தங்கியிருக்கும். இந்தக் கலையில் நன்கு பயிற்றப்பட்டுத் தேர்ந்தவர்களாகக் கிறீஸ்தவ பாதிரிமார்கள் விளங்குகிறார்கள். அவர்கள் தங்கள் குருமனைகளிலோ சிறுவர் வாழ்வகங்களிலோ பணியாற்ற ஆட்களைத் தேடி விளம்பரஞ் செய்வதில்லை!

சுருங்கக் கூறுவதாயின், இச்சிறார்கள் உரியமுறையில் வளர்த்தெடுக்கப்படுவார்களாயின், நாம் இக்கட்டுரையில் முன் வைக்கும் சைவப் பிரசாரகர்கள் பயிற்சிக் கல்லூரி, சைவச் சிறார் இல்லங்கள், முறைசாராக் கல்வி நிறுவனங்கள், சைவத் தலைமை அலுவலக நிர்வாகக் கட்டமைப்பு ஆகியவற்றின் முதுகெலும்பாகவும் வாழ்நாட் சொத்தாகவும் அவர்களைப் புடமிட்டு எடுக்க முடியும். சைவச் சிறார் இல்லங்களைப் பராமரிப்பவர்களுக்குக்கான நன்கு திட்டமிடப்பட்ட பயிற்சி நெறியொன்று மேற் குறிப்பிடப்பட்ட சைவப் பிரசாரகர்கள் பயிற்சிக் கல்லூரியினால் நடத்தப்படுதல் வேண்டும்.

சைவச் சிறார் இல்லங்களைத் தாமாக நாடி வருபவர்களை அரவணைப்பது மட்டுமன்றி இவ்வில்லங்களில் சேர்க்கப்படக்கூடிய பிள்ளைகள் எங்குள்ளார்கள் என்பதைத் தேடிக் கண்டுபிடித்து சேர்ப்பதும் விரும்பத்தக்கது.

அடுத்து இன்றைய தேவைகளில் ஒன்றாக நாம் முன்வைக்கும் சைவத் தலைமை நிறுவனம், இச்சிறுவர் வாழ்வகங்களை எல்லாம் பின்னல் வலை போன்றதொரு அமைப்பால் ஒன்றிற்கொன்று உதவக்கூடிய முறையில் இணைத்து வழி நடத்துமாயின் ஒரு சில வருடங்களில் குறித்த சைவ நிறுவனத்தின் பல்வேறு பட்ட பணிகளுக்குத் தேவைப்படும் ஆளணியினரைத் தேடி அலைய வேண்டிய தேவை ஏற்படாது.

4. சைவ நிறுவனங்கள் எதுவுமே நீடித்த காலத்திற்குச் செழித்திருக்கவில்லை. இதனைச் சைவ சமயத்தவரின் சாபக்கேடு எனச் சிலர் கூறுவர். இந்த விடயத்தில் சைவ சமூகம் சீர் திருந்தும் என்ற நம்பிக்கை பலருக்கு இல்லை. சைவ நிறுவனங்கள் நீடித்த காலத்திற்குச் செழித்திருக்காமைக்கான காரணங்களை நாம் ஏற்கனவே நிரற்படுத்தியுள்ளோம்.

இன்று எதுவித அடிப்படைக் கோட்பாடுகளுமின்றி சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப சமயக் கோட்பாடுகளை வியாக்கியானஞ் செய்பவர்களே தம்மைச் சமயத் தலைவர்களாகக் – குரல் தரவல்ல அதிகாரிகள் போல – வெளிப்படுத்தி நடந்து கொள்கின்றனர். அவர்களது செயற்பாடுகளே மக்களிடையே சைவமய வழிபாட்டு முறைகள், அடிப்படைக் கோட்பாடுகள் பற்றிச் சந்தேகங்கள் எழக் காரணமாய் அமைகின்றன.

இவற்றை நிவர்த்திக்கச் சைவசமயத்திற்கு வலுவான கட்டுக்கோப்புள்ள தலைமைத்துவக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

* இத்தலைமைப் பீடமே யாழ்ப்பாணத்தில் சைவசமய விவகாரங்கள் அனைத்திற்கும் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் உடையதாயிருத்தல் வேண்டும்.

* இத்தலைமைப் பீடத்தின் அந்தஸ்தை இந்து சமய விவகார அமைச்சு அங்கீகரித்தல் வேண்டும்.

* துறவி ஒருவரே இத்தலைமைப் பீடத்தின் தலைவராக இருக்க வேண்டும்.

* இத்தலைமைப் பீடத்தின் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டுச் சைவர்கள் ஒழுகுதல் வேண்டும்.

* சைவ சமூகத்தை ஒன்றுபட்டுச் செயற்பட வைத்தல், சைவர்களிடையே சைவ உணர்வு – சைவ அபிமானம் ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளல், சைவ சமூகத்தைச் சுய கௌரவம் உள்ளவொரு சமூகமாக உருவாக்க உழைத்தல், நாட்டு விவகாரங்களில் சைவ சமயத்தவர்களின் உணர்வுகள் அபிலாசைகள் மதிக்கப்படவும் கருத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய தொன்றாகக் கருதப்படவும் வேண்டியதொரு நிலையை ஏற்படுத்தல், பொது விவகாரங்களில் சைவ சமூகம் வெறும் பார்வையாளர்களாக அல்லாது பங்காளர்களாகக் கணிக்கக் கூடிய நிலையை ஏற்படுத்தல் ஆகியவற்றை யதார்த்தமாக்கவும் இத்தலைமைப் பீடம் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

* இத்தலைமைப்பீடம் நலிந்த மக்களுக்கு கைகொடுத்து உதவி, சமூகத்தின் சமய, கலாசார, பொருளாதார முன்னேற்றத்திற் காகவும் உழைக்க வேண்டும்.

* இத்தலைமைப் பீடத்தில் ஓர் அறிஞர் சபை இருத்தல் வேண்டும்.

* இந்த அறிஞர் சபை மூலம் ஐயப்பாடுகள், பிரச்சனைகள் பற்றி ஆராய்ந்தே தலைமைப் பீடம் தீர்மானங்கள் எடுத்தல் வேண்டும்.

* இத் தலைமைப் பீடம் வேத சிவாகமங்கள், சைவ சித்தாந்த சாஸ்திரங்கள், திருமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆராய்ந்து எழக்கூடிய பிரச்சனைகளுக்கு முடிவு காணும்.

* பிரேரிக்கப்பட்டுள்ள சைவப் பிரசாரகர்கள், குருமார்கள் பயிற்சிக் கல்லூரி இத்தலைமைப் பீடத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும்.

* இத்தலைமைப் பீடத்துத் தலைமைத் துறவி (சைவத் தலைமைப் பீடாதிபதி) யின் தலைமையின் கீழ் சைவநிறுவனங்கள் மாநாடு (Conference of Saiva Institutions) எனும் ஒரு சபை நிறுவப்படுதல் வேண்டும். இம்மாநாட்டின் பொதுச் சபையில்

சைவசமய ஆதீனங்களும், பீடங்களும், ஒரு குறித்த வரையறைக்குள் வரும் சைவாலயங்களும் சைவ சபைகளும் அங்கம் வகித்தல் வேண்டும்.

* சைவத் தலைமைப் பீடாதிபதியை இம்மாநாடு தெரிவு செய்யும்.

* சைவத் தலைமைப் பீடத்திற்குச் செயலாளர் நாயகமொருவர் பொதுச்சபையால் நியமிக்கப்பட வேண்டும். ஊழியம் பெறும் முழுநேர ஊழியரான இவரே சைவத் தலைமைப் பீடத்தின் வழிகாட்டுதலுக்கமைய அதன் செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்று நிறைவேற்றும் நிறைவேற்று அதிகாரியாயிருப்பார். பொதுச் சபையிலிருந்து தெரிவாகும் பொறுப்பாண்மைக் குழுவொன்று சைவத் தலைமைத் துறவியின் தலைமையில் மாதா மாதம் கூடி நிர்வாகம் சம்பந்தமான முடிவுகளை எடுக்கும்.

* சைவப் பிரசாரகர்களாகப் பயிற்சி பெற்றவர்களை சைவப் பிரசாரகர்களாகவும் சைவ மக்களின் சமய, சமூக, பொருளாதார தேவைகளைக் கவனிக்கும் அதிகாரிகளாகவும் பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் நியமித்து அவர்களுக்குக் கௌரவமான ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

* செயலாளர் நாயகத்தின் கீழ் செயற்றிறன் மிக்கவொரு நிருவாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு கிராம சேவையாளர் பிரிவு வாரியாகச் சைவசமய விவகாரங்கள் பற்றிய சகல விபரங்களும் பேணப்பட வேண்டும்.

* சைவ நிறுவனங்களும் ஆலயங்களும் சுயமாக இயங்குமாயினும் அவை இத்தலைமைப் பீடத்தின் கண்காணிப்பிற்கு உட்பட்டிருக்கும்.

மேலே முன் வைக்கப்பட்ட பிரேரணைகள் நடைமுறைச் சாத்தியமானவையா, சைவப் பிரசாரகர்கள் குருமார்கள் கல்லூரியில் போதியளவு மாணவர்கள் சேர்வார்களா, பணத்துக்கு என்ன செய்வது போன்ற வினாக்கள் எழத்தான் செய்யும். ஐயத்துக் கிடமின்றி இது நடைமுறைச் சாத்தியமானது. ஏனைய சமயத்தினர் குருமார்களையும் பிரசாரகர்களைப் பயிற்றுவிக்க கல்லூரிகளை நடத்தவில்லையா? அவர்கள் பணத்தைக் கோவிற் கட்டடங்களில் முடக்குவதில்லை. அவர்கள் ஒரு தலைமையின் கீழ் ஒன்றுபட்டுச்

செயற்பட்டு முன்னேறுகிறார்கள். சைவசமூகமும் ஆளுக்கொரு திசையிற் செல்லாமல் ஒற்றுமையுடனும் தீர்க்கதரிசனத்துடனும் தியாக சிந்தையுடனும் செயற்படுமாயின் சாதிக்கமுடியாதது ஒன்றுமில்லை. பயிற்சிக் காலத்தே உதவிப்பணம், பயிற்சியின் முடிவில் தேர்ச்சி பெற்றபின் வேலை வாய்ப்பு, கௌரவமான ஊதியம் ஆகியவை உறுதிப்படுத்தப்படுமாயின் போதியளவு மாணவர்கள் சேருவார்கள்.

தலைமைப் பீடத்தையும் பயிற்சிக் கல்லூரியையும் உருவாக்கி நடாத்துவதற்கு பல கோடி ரூபா முதலீடு செய்ய வேண்டியிருக்கும். இந்நிதியை எவ்வாறு திரட்டுவது? இப்பிரேரணைகளுக்கெனக் கேட்டால் ஒரு சில இலட்ச ரூபா தானும் சேராது. ஏனெனில் முன் வைக்கப்பட்டிருக்கும் பிரேரணைகளின் முக்கியத்துவத்தை உணரக்கூடிய நிலையில் சைவ சமூகம் விழிப்புணர்வுடன் இல்லை. இவை முற்றாகப் பயன்தரும் காலத்தில் தான் அவ்வாறான விழிப்புணர்வு ஏற்படும்.

இன்று மக்கள் கோயில்களுக்குத்தான் பணத்தை வாரி வழங்குகிறார்கள். கோயில் நிர்வாகங்கள் தீர்க்கதரிசனத்துடனும் விவேகத்துடனும் செயற்பட்டுத் தம்மிடம் சேரும் பொருளைச் செலவு செய்யும் போது பின்வரும் மூன்று விடயங்களில் சமநிலை பேண முயல வேண்டும்.

(1) ஆலயத்தைச் சிறந்த நிலையிற் பேணுதல். நித்திய நைமித்தியங்கள் ஒழுங்காக நடைபெற ஆவன செய்தல்.

(2) ஆலயங்களில் சேவையாற்றத் தகுதி வாய்ந்த, சாத்திர தோத்திர பொருளுணர்ச்சி பெற்ற, மக்களுக்கு ஆறுதல் கூறி நல்வழிப்படுத்தக் கூடிய, குருமார்களையும், சமய தத்துவங்களையும் வாழ்க்கை முறையையும் போதித்து மக்களை சமய வழிப்படுத்தக்கூடிய போதகர்களையும் உருவாக்குதல்.

(3) சமூகத்தில் நலிந்தவர்களை இனங்கண்டு அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர உதவுதல்.

மேலே கூறப்பட்ட மூன்று விடயங்களில் இறுதி இரண்டையும் நடைமுறைப் படுத்தும் பொறுப்பு பிரேரிக்கப்பபட்டுள்ள தலைமைப் பீடத்திடம் இருக்குமாகையின் அதன் செயற்பாட்டுக்கு ஆலயங்கள் தம் உபரி வருமானத்தின் பெரும் பகுதியைக் கொடுக்க வேண்டும்.

இதர சமயங்களின் செயற்பாடுகளை நோக்கின், அவர்கள் இம்மூன்று விடயங்களுக்கும் சமஅளவு முக்கியத்துவம் கொடுப்பதைக் காணலாம். சைவ சமூகத்தைப் பொறுத்தளவில் இச்சமநிலை பேணப்படுவதில்லை. மேலே மூன்றாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள சமூகசேவையில் ஒரு சில ஆலயங்களே ஈடுபட்டுள்ளன. இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி வாய்ந்த குருமார்களையும் போதகர்களையும் உருவாக்கும் விடயத்தில் எந்தவொரு ஆலயமும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவுக்கு ஈடுபடவில்லை. இப்போக்கு மாற வேண்டும்.

முன்னைய காலங்கள்போல் அல்லாது கடந்த பத்து ஆண்டுகளாக யாழ்ப்பாணத்திலுள்ள சைவாலயங்களுக்குப் பிரதி வருடமும் பல கோடி ரூபாய்கள் புலம்பெயர்ந்து வாழும் யாழ்ப்பாணத்துச் சைவ மக்களால் அனுப்பி வைக்கப்பட்டன. இன்றும் அனுப்பி வைக்கப்படுகின்றன. அதற்கு மேலதிகமாகச் சில கோடி ரூபாய்கள் இந்து சமய விவகார அமைச்சினால் சமீப காலத்தில் ஆலயங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவை முழுவதும் கட்டடங்கள் கட்டுவதற்கே உபயோகமாகின்றன. ஆலயங்களைச் சிறந்த நிலையிற் பேணி அங்கு நித்திய நைமித்தியங்கள் ஒழுங்காக நடைபெறச் செய்வதில் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. ஆனால் தேவைக்கு அதிகமாகப் புதிது புதிதாகக் கட்டடங்கள் கட்டுவிப்பதிலும் அழகூட்டுவதிலும் புதிய ஆலயங்கள் அமைப்பதிலும் பெருந் தொகைப்பணம் செலவழிக்கப்படுகிறது. பிரதி வருடமும் கோடிக்கணக்கான ரூபாய்கள் திருவிழாக்களைப் பெரியளவில் நடத்துவதற்குச் செலவழிக்கப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கோவில்களைப் பெரிதாகக் கட்டுவதாலோ பெருஞ் செலவில் விழாக்களை நடத்துவதாலோ சமயத்தின் குறிக்கோளை அடைந்து விடமுடியாது. தமது சமய வாழ்வின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட வழிபடுநரும் தகுதி வாய்ந்த குருமாரும் அமையாத கோவில்கள் வெறும் கட்டடத் தொகுதிகளாகவும் களியாட்ட நிலையங்களாகவும் ஆகிவிடும் என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். மேலும் வெளி நாடுகளில் இருந்து கிடைக்கும் நிதி இன்னும் சில தசாப்தங்களுள் வரண்டு விடும் என்பதையும் மனத்திருத்தி விவேகமான முறையில் இப்போ கிடைக்கும் பணத்தை ஆலய நிர்வாகங்கள் முதலீடு செய்ய முன்வர வேண்டும்.

**முடிவுரை**

கால மாற்றத்திற் கேற்ற மாற்றங்களை உள்வாங்கிக் கொள்ளும்போதுதான் மரபு செழிப்புறும். நாவலர் பெருமான் தம் வாழ்நாளில் அன்னியர் வருகையால் ஏற்பட்ட நிலைமைகளுக்கு ஏற்ப அப்போது நிலவிய கல்வி மரபில் தகுந்த மாற்றங்களை ஏற்படுத்தி அதனைச் செழுமைப்படுத்தினார். அன்னியராட்சி முடிவுற்று ஜனநாயக ஆட்சி முறையில் வாழும் நாம் இக்கால கட்டத்துச் சவால்களுக்கு ஏற்ப சில புதிய சிந்தனைகளை உள்வாங்கினாற்றான் எமது மொழியும் சமயமும் எழுச்சி பெறும். நாவலர் பெருமான் நிறுவிய முதற் கல்விக் கூடம் அதன் நூற்றிஐம்பதாவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இச்சமயத்தில் நாவலர் கல்வி மரபைச் செழுமைப்படுத்த மேலே நாம் முன்வைத்த திட்டங்களைக் கவனத்திற் கெடுத்து நாவலர் கல்வி மரபு மீண்டும் வீறு நடை போடவும் இவ்விழா சைவத் தமிழ் வளர்ச்சிக்கான எழுச்சி விழாவாக அமையவும் சைவத் தமிழ் சமூகம் ஒற்றுமையுடன் உதவ வேண்டும். ஒற்றுமையின்றேல் அனைவருக்கும் தாழ்வு. ஒற்றுமையுடன் செயற்பட்டால் லௌகிக நெறி, வைதிக நெறி இரண்டிலும் மேன்மை அடையலாம் என்பது நாவலர் வாக்கு.

“தமிழர்களாகிய நம்மவர்கள் யாதாயினும் ஒரு கருமத்தை நடத்துவதற்கு ஒருங்கு கூடுதல் அரிது. ஒரே வழிக்கூடினும் ஐக்கியத்தோடு நிலை பெற்று எடுத்த கருமத்தை நிறைவேற்றல் அரிது. அவர்கள் ஐக்கியமேயின்றிப் பெரும்பான்மையுந் தங்கள் உள்ளத்தில் விளையும் பகையையே பாராட்டிக் கலகம் விளைவித்து, எடுத்த கருமத்தைக் கைவிடுவதே வழக்கம். இது பற்றியே நம்மவர்கள் லௌகிக நெறி, வைதிக நெறி என்னும் இரண்டினும் மேன்மை அடையாது, அன்னிய தேசத்தார்களும் அன்னிய பாஷையாளர்களும் அன்னிய சமயத்தார்களுமாய் உள்ளவர்களாலே அவமதிக்கப்பட்டுத் தலை கவிழ்கின்றார்கள். நம்மவர்கள் எல்லோரும் பொறாமை, பகை, முதலியவைகள் இன்றி, ஐக்கியம் உடையவர்களாய் கூடும் பொருட்டும், தங்கள் தங்களால் இயன்ற மட்டும் வாக்காலும் காயத்தாலும் பொருளாலும் சகாயஞ் செய்து உத்தமோத்தம சிவபுண்ணியங்களை விதிப்படி சிரத்தையோடு நிறைவேற்றிப் பெரும் புகழையும் புண்ணியத்தையும் அடையும் பொருட்டுத் திருவருள் சுரக்கும்படி பரம காருண்ய சமுத்திரமாகிய சிவபெருமானுடைய திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.”

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

## பேராசிரியர் இ. குமாரவடிவேல்
B.Sc Sp. (Physics) Hons., Ph.d (Bristol)



பேராசிரியர் இராசரத்தினம் குமாரவடிவேல் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பௌதிகத் துறைத் தலைவரும், முதுநிலைப் பேராசிரியரும், விஞ்ஞானப் பீடாதிபதியும் ஆவார். அவர் யாழ். பல்கலைக்கழகப் பதில் உபவேந்தராகவும் சிலகாலம் பதவி வகித்தவர். பௌதிகத் துறையில் பல புலமைப் பரிசில்களையும் விருதுகளையும் பெற்றவர். பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை உலக விஞ்ஞான ஆய்வரங்குகளில் சமர்ப்பித்துப் புகழ் பெற்றவர். இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் கவென்டிஸ் விஞ்ஞான ஆய்வகத்தில் திருவருகைப் பேராசிரியராகக் (Visiting Professor) ஆகக் கடமை ஆற்றியவர். முப்பத்துநான்கு வருடங்களுக்கு மேலாக பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களில் பல்துறைநிலை மாணவர்களுக்கும் பௌதிகம் கற்பித்து வரும் அநுபவம் மிக்கவர். திரவ உலோகங்களினதும் அவற்றின் உலோக மேற்பரப்புகளின் அமைப்பு முறையில் வெப்பவியக்க விசையியல் இயல்புகள் (The Theory of the structure and thermodynamic properties of liquid metals and liquid metal surfaces.) பற்றிய அவரின் ஆய்வு பல உலகப் பௌதிக விஞ்ஞானிகளால் முதன்மை ஆய்வு எனப் பாராட்டப் பெற்றது. மேலும் இத்துறைகளில் தொடர்ந்தும் ஆய்வு நடத்தி வருபவர்.

பேராசிரியர் அவர்கள் வில்லூன்றி விநாயக ஆலய அறங்காவலர் ஆகக் கடமை ஆற்றுகிறார். யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினால் வெளியிடப்படும் இந்து சாதனம் என்ற மாத இதழின் ஆசிரியராக (1999-2003) வரை அரும்பணி ஆற்றியவர். அவர் எழுதிய ஆசிரியத் தலைப்புகள் மக்களின் சிந்தனைகளைத் தூண்டவும், சைவசமயத் தமிழ் உணர்வினை மக்கள் பெறவும் வழி செய்தன. சைவசமய தமிழ்ப்பற்று மிக்க சைவாசார சீலரும், சிறந்த சிந்தனையாளரும் ஆவர்.